ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரு. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 14—4—1946 | இதழ் 52

# தாமரை பூத்த குளம்

(பரதன்)

"கலைமணம்கமழவேண்டுமானல் கம்பன், கட்டாயம்நமக்குத்தேவை" என்று திட்டமாகத் தோழரொருவர் கூறுகிருர். அவர் பல பாடல்களைப் படித்து ரசித்தவர். ஆகவே அவருக்கு, ஏன்நாம் கம்பர் பாடிய நூலைக் கண்டிக்கிறேம், என்பதைக் கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அவர் என் நண்பர். ஆகவே அவரை நான் காடு மேடு அழைத்துச்சென்று கஷ்டப்படுத்தவிரும்பவில்லை. மேலும் அவர் கலா ரசிகரானபடியால், ஆங்கு செல்வது சிரமம். அவரை நான் நாலு தடாகங்களுக்கு அழைத்துச் செல்கிறேன். குளத்தோரமாக நடந்துகொண்டே, ஏன் கம்பர்மீதுகுறை கூறுகிறேம் என்பதைப் பேசினுல், அவருடைய மனமும் குளிரும், நமது நிலையும் தெளிவுபடும். நீங்களும் வாருங்கள் பொழுதுபோக்காகவும் இருக்கும், பாடமும் கிடைக்கும்.

★

நாலு தடாகங்களிலே, இரண்டு நிடத தேசத்திலுள்ளவை; ஒன்று அயோத்திக்கும் மிதுலைக்கும் இடையே உள்ளது; மற்றென்று கிராமீயத் தடாகம்.

★

அதிவீரராமபாண்டியன், பொதுவாகப் பலவித ரசங்களும் செறிந்திருப்பினும், சிருங்கார ரசமெனப்படும் காமச்சுவை அதிகமாகச் செறிந்ததாகவே, நைடதம் என்ற நூலை இயற்றினுன். ஆசிரியன் ஓர் மன்னன். மங்கையரின் மதுரமொழியின் இனிமையையும், சரசத்தின் சாற்றையும், பருகிப் பழக்கப்பட்டவன். எத்தனையோ மின்னல்கொடிகளை, மேனி மினுக்கிகளை, கீதமொழிக்கிளிகளை, மான்விழிகளை, மலர் முகவதிகளைக்கண்டு, களிக்கும் வாய்ப்பு, மற்றக்கவிகளைவிட அதிவீரராமபாண்டியனுக்கு அதிகமாக இருந்திருக்கத்தானே வேண்டும்! வெறும் சற்பனையை மட்டுமே நம்பிக் கவிபாடவேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. எழிலிடை மாதர் அவன் இணைவிழி காட்டும் குறிப்பறிந்து நடக்கக் காத்துக்கிடந்திருப்பர். எனவே அவன் "அந்தச்சுவை"யை அழகுறக் கவிபாட அனுபவத்தைத் துணைகொள்ளமுடியும். மன்னவன் என்ற நிலைமட்டுமல்ல, அவனுடைய குணமே, காமக் கவிபாடுதற்கேற்றது என்பதாகக் கதையும்கூறுவர். பொன்மேனியும், தாமரைமுகமும், முத்துப் பற்களும் பவழ இதழும், இன்னபிறவும் அமையப்பெற்றுப்புன்சிரிப்பால்போரிட்டுப் போகக்களத்திலே சலிக்காதிருக்கக்கூடிய சரசியாகத் தேடித்தேடிப்பார்த்துத் தன் உறவின் முறையிலே அத்தகைய இலக்கணங்களுடைய உல்லாசி கிடைக்கப்பெருததால், வேறு குலத்திலே பெண்கொண்டான் என்றோர் கதையும் உண்டு. இதுகட்டிவிட்டதாகஇருக்கக்கூடும். ஆனல், அவனுடைய குணத்தை, அதாவது மன்னனின் மனம் மங்கையர் ஆராய்ச்சியிலே அதிகமாகப் படிந்திருந்தது என்பதை விளக்கவே இப்புனைந்துரை ஏற்பட்டிருக்கவேண்டும். இத்தகைய மன்னன், தன்னையொத்த வேறோர் மன்னன் கதையை, அதாவது நளச்சக்கரவர்த்தியின் கதையைப் பாடினுன். காரிகையரின் காமலீலைகளைக் காண்டம் காண்டமாகக் கவியாக்கக் கூடியஅனுபவ அறிவும் இருந்தது அவனுக்கு. அவ்விதம் பாடிட "நைடதம்" இடங்கொடுக்கக்கூடிய நூலே, எனெனில், முற்றுந்துறந்த முனிபுங்கவர்களும், கற்றுத் தெளிந்துகாட்டேகியவர்களும்உய்ய, உலகமாந்தர்படித்து,படிக்கப் பக்கநின்று கேட்டும் புண்யம்பெறவேண்டுமென்று எழுதப்பட்ட தேவகதை அல்ல, ஒரு தேசத்து மன்னன் கதை. ஆண்டவ அவதாரத்தின் அருமை பெருமைகளை அவனியோருக்கு உரைத்து, நீதிகள் புகட்டி, நேர்மையின் தன்மையைத் தீட்டிக்காட்டித் திருவருளைக்கூட்டுவிக்கும் புண்ய சரிதமல்ல! சாதாரண அரசனின் அவதியை விளக்கும் கதை. அதிலே, அருக்குமங்கையரின்மலரடி வருடி கருத்தறிந்தபின் அரிவை நடவிடும் [illegible]ரைப்பற்றியோ, அந்தப்புர லீலைகளைப்பற்றியோ எவ்வளவு வேண்டுமானலும் எழுதலாம், பொருந்தும். மதுக்கடையிலே மகேஸ்வர வணக்கமும், மகேஸ்வரன் கோயிலிலே மதுப்பிரசாதமும், பொருத்தமுடையதாகஇருக்கமுடியுமா! அதுபோலவேதான், தேவகதையிலே, தெளிவற்ற மக்கட்கும் தெய்வீகத்தின் தன்மையைத்தெளிவாகத் தீட்டிக்காட்ட எழுந்த சரிதைகளில், காமச்சுவையைக்கலக்கிவிடுவதுகூடாது, கலக்கினுலும்ஒரு அளவு இருக்கவேண்டும், வரையறை இருத்தல்வேண்டும், நேரடியாகப் பள்ளி அறைக்கே வாசகர்களை இழுத்துச்சென்று, ஆழ்ந்து பார்! கூர்ந்துபார்! என்று அடுக்கடுக்காகக் கூறுவது அடாது. இவ்வளவு கூறிவிட்டு, இடையிடையே எம்பெருமான் திருவடிகளே சரணம் என்று இறைஞ்சினுல், அது வெறும் இரைச்சலாக இருக்கமுடியுமே தவிர, இன்னருளைக் கூட்டுவிக்காது என்பதே அன்போன்றுரின் கருத்து. நைடத நூலாசிரியர், இந்த 'வரப்பு' கடவாமல் பாடியிருக்கிருர். கம்பர்போலக், காடுமேடு சுற்றி வரவில்லை. இதன் பயனுக அவருடைய கவிதாதிறம் பாழ்பட்டுப் போய்விடவுமில்லை. காதல், தாபம், ஊடல், கூடல், சந்திரனைப் பழித்தல், தென்றலை இகழ்தல், மன்மதனைக் கடிந்துரைத்தல், மாலை கண்டு மருளல் எனும் இன்ன பிற காமச்சுவைக்குரிய இலக்கண அமைப்புகளை அவர், விட்டுவிட வில்லை, ஒழுங்காகவென்றவிடாமல் பாடித்தான்இருக்கிருர், என்றுலும்கூட, அந்த வரம்பு கடவாது இருக்கிருர். கம்பரின் கவியிலே, அந்த எல்லைக்கல் தான் இல்லை, கொஞ்சமும் இல்லை. அவர் அன்று பாடிவிட்டுப்போக, அந்தப்பாடல்களிலே உள்ள "அந்தப்புர விளக்க ரசங்களை" நமது இயக்கத்தவர் எடுத்துக்காட்டிப், புண்ய கதையிலே இது இருக்கலாமா, இது தேவாசமாகுமா, இந்த ரசங்களிலே திளைத்துவிட்டபிறகு மக்கள் ராமரசம் தேடுவாரா, என்றுகேட்கவே, இன்று, கம்பனின் கல்லறைக்குக் காவலராக உள்ள கலாரசிகர்கள், கம்பனின் பாடல்களிலே இன்னின்ன இடத்திலே வளைந்துவிட்டது, வேறோர் கரம்பட்டதால், இன்ன இடத்திலே ஒடிந்தே விட்டது, இந்தக்கவிதைகள், கம்பர் பாடியதே அல்ல, என்றுகூறவும், திருத்தவும், தீட்டிக்காட்டவும், வெட்டித் தள்ளவும், சலித்தெடுக்கவும், பொறுக்குமணிகளைச் சேர்க்கவுமான நிலைமை உண்டாகிவிட்டது. இந்த 'உரிமை' இக்கலாரசிகர்கட்கு உண்டோ இல்லையோ, நமதுகவலை அதுவல்ல. உண்டென்று எண்ணுவோர் கலனை கவிதைகளைத் திருத்தட்டும், இல்லை என்று எண்ணுவோர், 'இல்லடா! உனக்கு இந்த உரிமை ஏதடா? பதில் சொல்லடா!' என்று பாணிபாடட்டும், நாட்டிலே நாம் காணும் நாணயமான வேடிக்கைகளிலே இது ஒன்று, நமக்கென்ன பார்ப்போம். ஆனல் இவர்களை இந்த நிலைக்குக் கொண்டுவந்த[illegible]

## எது தம்பி வேண்டும்?

★

[ஒரு தோழர், இந்தக் கொள்கை சிறந்ததா அந்தக் கொள்கை சிறந்ததா? எந்தக் கட்சி உயர்ந்தது? என்று பலப்பல பிரச்னைகளைப்பற்றிய விளக்கம் விசாரிக்கும் முறையில் புரட்சிக்கவி பாரதிதாசனுக்கு ஒரு கடிதம் எழுதினுர்.

கவிஞர், அக்கடிதத்தைக் கண்டார். தம்பி, ஏதேதோ பிரச்னைகளை எண்ணித் தவிப்பதையும் தடுத்து, எது முக்கியமான பிரச்னை என்பதையும் விளக்கி, அதன்மூலமாகவே தமது கருத்தையும் வெளிப்படுத்த வேண்டும் என்று நினைத்து, ஒரு கவிதைக் கடிதம் தீட்டி அனுப்பினுர். அது இது.]

கோலேயிலே ஒரு சிட்டு—நல்ல கூட்டினிலே ஒருகிள்ளை
சோல்லும் இவற்றினில் யாது—ஒருதுன்பம் இல்லாதது கூறு.

முல்லையிலே ஒரு வண்டு—பணமூட்டையின்மேல் ஒரு செல்வன்
இல்லைஎன்னுத நல்வாழ்வை நீ—இந்த இரண்டினில் விளக்கு

கோயில் பார்ப்பனர் வேதம்—குப்பை கூட்டிடுவாள் தமிழ்ப்பேச்சு
தூயதுயாது சொல் தம்பி—அன்றித் தொல்லைவிளைப்பது யாது?

வாயலிலே கெஞ்சும் ஏழை—சிலைவார்க்குந் திருப்பணியாளன்
ஈய நினைத்திடும் காசை—நீ யாருக்குநல்குவாய் தம்பி.

ஊருக்கு உழைத்திடக் கேட்டார்—உனை யோகம்புரிந்திடச் சொன்னுர்
யாருக்கு உடன்பட எண்ணம்நீ—இந்த இரண்டினில் தம்பி.

கார்விதைக்கும் தொழிலாளன்—நேர் கைலையை வேண்டிடும் சைவன்
யாரப்பனே நலம் செய்வோன்—உரை இந்தப்பேர் வையகத்துக்கே.

கற்சிலை செய்தகற்றச்சன்—இருகைதொழும் கோயிலின் வேலன்
நற்கலை ஈபவன் யாவன்—இதை நன்குவிளக்கிடு தம்பி.

முற்றும் இசைத் தொழிலாளி—வாய்மூடி அருள்செய்யும் கண்ணன்
நற்சுவை தந்தவன் யாவன்—நீ நன்றிசெலுத்துதல் யார்க்கு?

கடவுள் அணிந்திட்ட மாலை—பூங்காவிற் சிரிக்கின்ற முல்லை
உடைபட்ட நெஞ்சத்தில் தம்பி—நல்ல உயிர்கொண்டு சேர்ப்பதுயாது?

படைகொண்ட மன்னவன் செங்கோல்—சிறுபண்ணையில் பொதுத்தன்மை
எடைபோட்டு நீ கூறுவாயோ—இந்த எதுநன்மை எதுதீமை, தம்பி.

நோய்தரின் பிழையான் புதுநூல்—பிறர்நூல்கண்டு செய்திட்ட பெருநூல்
வையத்தில் எதுதம்பி வேண்டும்—நீவாய்விட்டு விள்ளுவாய் தம்பி.

உய்யும் புரோகிதத் தந்தை—அவன், உத்யோகம்பார்க்கும் மைந்தன்
செய்யும் திருத்தொண்டு இரண்டில்—தம்பி, செம்மையாம் ஒன்றினைக்கூறு.

நைகின்ற பெண்டாட்டி பிள்ளை—தெருநடுவிலே தள்ளாடும் கிழவன்
ஐயோ எனச் சொன்னபோது—நீயாருக்கு முன் உதவவேண்டும்?

# ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


## தாமரை பூத்த குளம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

எது? கம்பன் கவிதையானல் என்ன! இராமகாதையாக இருந்தால்என்ன? கேடுஇருந்தால் களைந்தெறி! குப்பை இருந்தால்கூட்டித் தள்ளு! இழுக்கு இருந்தால்எடுத்து எறி! தீது தருமானல் தீயிலிடு! என்று நாம் கூறி வருவதுதான். மற்றும் சில புலவர்பெருமக்கள், கம்பனைக் காப்பாற்றும்பணி தமது என்று கருதிக்கொண்டு, கவிதையைப் பதம் பிரிப்பதிலும், பதங்களிலே இங்கே ஓர்தேய்வு ஏற்பட்டு விட்டது. இங்கே கடை குறைந்திருக்கிறது என்று சிலபல கூறிப் பொருள் இதுவல்ல, வேறுண்டு, வேறும்உண்டு, என்று கூறுகின்றனர். இப்படிக் கூறும்போது, இத்தகையவர்களின் புலமையைக் கண்டு நமக்கு மதிப்பு உண்டாகின்றது என்றபோதிலும், இவ்வளவு அறிவும், இத்தகைய திரைவிடு வேலைக்குப் பயன்படுகிறதே என்பதை எண்ணும்போது, பரிதாபம் ஏற்படத்தான் செய்கிறது. கடைவீதியிலே கனிவிற்பவன், அழுகிய பாகத்தை அறுத்துப்போட்டுவிட்டு, மிச்சமுள்ள பாகத்தின் மதுரத்தைப் புகழ்ந்துரைத்து, கிடைத்த வரையிலே கிடைக்கட்டும், என்று பார்க்கிறானே, அதுபோல ஒருசாராரும்; சாம்பிள்பழம் இனிப்புத்துண்டாகக்கொடுத்துப், புளிக்கும் பழங்களைக்கூடையிலே நிரப்பிக்கொடுத்துவிடுகிறானே, அதுபோலச்சிலரும் கலைவியாபாரம் செய்கின்றனர். கனியின்தன்மையல்ல, வியாபாரத்தின் காரணம், விற்பவரின்சமர்த்து!

இங்ஙனம் ஒட்டை ஒடிசலைத் தட்டி நிமிர்த்திக் கொடுப்பவரும், முலாமிடுவோருங்கூட, ஏதும் செய்ய முடியாது, தலையைக்கீழே தொங்கவிட்டுக் கொள்ளக்கூடிய கவிதைகளையும் கம்பர், தைரியமாகப்பாடித்தான் இருக்கிறார். அதிவீரராமபாண்டியன், மாதர்களைவர்ணிக்கிறபோது, அந்தந்த நிலைக்கு ஏற்றபடி மாதர்களை வர்ணிக்கப் பார்க்கிறோம். தடாகத்திலே தையலர் நீராடுவர், அதுபோது தாமரைக்கும் அவர்கள் முகத்திற்கும் மாறுபாடு காணமல், வண்டுகள் மயங்குப், குவளைக்கும், கோமளவல்லிகளின் கண்களுக்கும் மாறுபாடு காணது வண்டுகள் மருளும், என்று அதிவீரராமபாண்டியன் பாடுகிறார், அந்த அளவோடு, அதாவது வண்டுகள் பெண்டுகளைக் குளங்களிலே கண்ட அளவோடு நிறுத்திக்கொள்கிறார், ஒரு வரம்பு இருக்கட்டும் என்பதற்காக. அதே விதமான நிலைமையில் கம்பர் தீட்டும் கவிதைகளைப்பாருங்கள். நுண்பொருள் விளக்கம், எவ்வளவு! விளக்கம் உரைத்தலோடு விடுகிறாரா? ஆடவர், அக்காட்சியைக்காண்பதையும், அந்த நேரத்தில் அவ்வாடவர்கொண்ட கருத்துக்களையும், அக்கருத்துகளால் அவர்களின் கரமும் சிரமும் படும் பாட்டையும், "குளோசப்" எடுத்துக் காட்டாவிட்டால் கம்பருக்குத் திருப்தி ஏற்படுவதில்லை, ஏன்? இந்தவர்ணனைகளை அவர் இராமபூஜைக்குரியசஹஸ்ர நாம அர்ச்சனை என்று எண்ணுகிறாரா? பரிதாபத்துக்குரிய மக்கள், இவ்வளவு ரசங்களையும் கடந்தல்லவா, இராமரின் பெருமையைத் தெரிந்துகொள்ளமுடியும். இதற்குள் அவர்கள் அலுத்தே போய் விடுவார்களே! தேவகதைகூறி, மக்களைச்சன்மார்க்கத்திலே ஈடுபடச் செய்யக் கம்பன்காட்டும் வழி சரியானதுதானு என்றுதான் கம்பதாசர்களைக்கேட்கிறோம். சன்மார்க்கமென்ன அவ்வளவு நாற்றமும் கசப்புமுள்ளதா, அதன்மீது இவ்வளவு சுவையைப் பூசித்தா! அப்படி நல்ல எண்ணத்தோடு பூசித்தரப்பட்டாலும்கூட, சுவைப்பவர்கள், மதுரம் கிடைக்கும் வரை சுவைத்துவிட்டுக், கசப்புத் தெரியத் தொடங்கியதும் உமிழ்ந்துவிடுவார்களே, நோக்கம் ஈடேறவும் வழி சரியில்லையே! வேறுஎன்னகாரணம் இப்படி வரைமுறையின்றிக்கம்பர், வாரி வாரி இந்த ரசத்தை இறைப்பதற்கு? இதற்கோர் சமாதானம் கூறவேண்டாமா கலாவாணர்கள். எங்கே கூறினார்கள்? எப்போது கூறப்போகிறார்கள்? எப்படிக்கூறமுடியும்?

கம்பர் கையாண்ட அதேவிதமான நிலைமைகளையுங்கூட, நைடத நூல் ஆசிரியர், ஒருவரம்புகட்டியே புகல்கிறார், தாம் எடுத்துக்கொண்டதுசாதாரண அரசன் கதைஎன்றபோதிலுங்கூட. ஓடத்திலேறிச் சென்ற மாதர்மீது நீர் விழுவதால், மறைவிடம் தெரியலுற்ற சம்பவமொன்றைக் கம்பர் காட்டினரல்லவா? அந்தமறைவிடம் தெரியலுற்றதும், ஓடத்திலிருந்த ஆடவர், களைப்பு நீங்கிக்களிப்பு கொண்டனர் என்று பாடுகிறார் கம்பர். எந்த ஆடவனும், அத்தகைய நிலையிலே, கூர்ந்துநோக்கிக்குளிர்மனமானன் என்று, பண்புவிளக்கத்தைப் பெரிதென்று கருதும்எந்தக்கவியும்பாடமாட்டார். கம்பருக்குப் பண்பு விளக்கத்திலே இருந்த ஆர்வத்தைவிட, மங்கையரின் மேலிட மறைவிட விளக்கத்திலே இருந்த மோகம் அதிகம். ஆகவேதான், காணக்கூடாத இடத்தைக்கண்ட ஆடவர், களிகொண்டனர் என்று, பச்சையாகப்பாடுகிறார். ஏககாலத்திலே, பகவான் திரு அவதாரம் செய்த அயோத்தியிலே மக்களின்மாண்பு, மறைவிடத்தைக் கண்டு மகிழும் அளவுபட்டுப்போய்விட்டதுஎன்பதும், மூடியிட்டு விடவேண்டிய சம்பவத்தைத்துளியும் தங்கு தடையின்றி விளக்கும் அளவு, கம்பரின் காமச்சுவை உணர்வு இருந்ததென்பதையும் நாம் உணருகிறோம். கடவுட்காதையிலே இக் காட்சியா என்று கேட்கிறோம்.

★


ஆடவர்தான் ஏதோ காமத்தால் கயவராயினர், மாதர்கள் எப்படிப் பொறுத்துக்கொண்டனர்? எப்படிப்பட்ட சரசியும் இப்படிப்பட்ட ஆடவரின் பார்வையைச் சகித்துக் கொள்ளமாட்டாளே, உத்தமஇராமனின் பிறப்பிடமான அயோத்திவாழ்மாதர்கள் எப்படிச் சகித்துக் கொண்டனர்? ஆடவர்பார்த்தனர், ஆரணங்குகள் அருவருப்படைந்தனர் என்றாவது கம்பர்பாடியிருக்கக்கூடாதா, காரிகையர் மீதேனும் களங்கம்படியாதிருக்கட்டும்என்ற தூயஎண்ணம்கொண்டு. இல்லையே! இதைவிட அரியசந்தர்ப்பம் கிடைக்கிறது அதிவீரராமபாண்டியருக்கு. தடாகத்திலேபெண்கள்நீர்விளையாடுகிறார்கள், அக்காட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, நளன் அவ்வழியே செல்கிறான்! இந்த "வாய்ப்பு"கிடைத்துவிட்டால்இராமனே தடுத்தாலும், அனுமானே குறுக்கிட்டாலும்கூடக் கம்பனைத் தடுக்கமுடியாது! நைடதநூல் ஆசிரியர், கட்டுக்கு அடங்குகிறார், பண்புக்குப் பழுது ஏற்படக்கூடாது என்பதற்காக. குமரிகள் குளத்திலே நீராடும் நேரத்திலே, அந்த இடத்திலே நளன் செல்லுதல் எங்ஙனம் பொருந்தும்? ஆடவனொருவன் தாம் நீராடுவதைக்கண்டால், நங்கையரின் மனம் புண்ணுகாதா, அவர்களின் பண்பும் கெடாதா? நளன் அக்காட்சியைக் கண்டது நங்கையருக்குத் தெரிந்ததாகக்கூறலாமா? இருசாராரின்மனப்பாங்கு மன்றோ இழுக்குடையதாக ஏற்பட்டுவிடும்? இவ்வளவும் இதற்கு மேலும் யோசிக்கிறார்கவி. கம்பனுல், யோசனை இந்தப் பிரச்சினைகளிலே சென்றிராது. எதை எதை எதெதற்கு ஒப்பிடலாம் என்ற யோசனையிலேஆழ்ந்துவிடுவார்; அதிலிருந்து அழகான கருத்துக்கள் கிளம்பிவிடும், காமரசம் ஊற்றெனக்கவிதா உருவிலே பெருகும். அதிவீரராம பாண்டியன், அந்தக் காட்சியைப் பண்புடன் பாடுகிறார், மங்கையரின் மேலிடமறைவிடம் தடாகத்திலே நீராடும் நேரத்திலே தெரிவது இயல்பு; அதனையும் அவர் இயல்புக்கு மாறுகக்கூறவில்லை. ஆனல் அதே நேரத்தில், நளனின் நற்பண்புகளுக்கு இழுக்கு நேரிடாதபடியும் பாதுகாத்துவிடுகிறார். எந்தக்கவியானலும், தானெடுத்துக்கொண்ட "சற்பாத்திரங்களை" இழுக்குச் சூழா வண்ணம் பாதுகாத்திட வேண்டாமா? அதற்காகவே அதிவீரராமபாண்டியன், நளன், நீராடும்நங்கையரைக்கண்டபோது, என்ன நிலையிலே, அவன் இருந்தான் என்பதை விளக்க ஒரு சம்பவத்தைக் கூறுகிறார். நளன்நங்கையரைக் கண்டானே தவிர, நங்கையர் எவரும் நளனைக் காணவில்லை! அவர்கள் நீராடுவதிலேயும், ஒருவரோடொருவர் விளையாடிக் கொண்டிருப்பதிலேயுமே கவனம் செலுத்தினர்போலும் என்று கூறுகிறாரா? அதுவுமில்லை. சுற்று முற்றும் பார்த்தாலும், நங்கையர் கண்களுக்கு நளன் தெரியமாட்டான்!! யார் கண்களுக்கும் தெரிய முடியாதபடி, உருவை மறைத்துக் கொண்டு, செல்கிறான் நளன். தமயந்தியின் திருநகரிலே, அரசிளங்குமரிக்குச் சுயவரம். மன்னர்கள் பலர் வருகின்றனர். தமயந்தியிடம் காதல்கொண்டநளனும்வருகிறான். தேவர்களும் வருகின்றனர். இந்திரன் தமயந்தியிடப்சென்று தன்னை மணம் புரிந்துகொள்ளும்படி சொல்லுமாறு நளனையேதூதனுப்புகிறான். "அடியேன் எங்ஙனம் அந்தப்புரம் செல்வது? அனுமதியார்களே!!" என்று நளன் விளம்ப, "கவலைவேண்டாம். யார் கண்களிலும் நீ தெரியமுடியாதபடி உன் உருவை மறைத்துக்கொண்டு செல்லும் மந்திரத்தைக் கற்பிக்கிறேன்" என்று இந்திரன் கூறுகிறான். அந்த மந்திரப்பலனுல், நளன் யார் கண்களிலும், படாமல்போகிறான். அந்த நேரமாகப் பார்த்துத்தான், நைடத நூலாசிரியர், நீர் விளையாடும் நங்கையரை நளன் கண்டதாகக் கூறுகிறார்.

> "யாவர்க்குங் கட்புலனுல் உருக் காண்கிலாத ஓர் நுட்பநூல் விஞ் சையை நுவன்றிட்டான்"

"அதாவது, எவர்களும்கண்ணுல் உருவத்தை அறியமுடியாததாகிய, நுண்ணிய நூலிலே சொல்லப் பட்ட மந்திரத்தைச் சொன்னுன்" என்ற பகுதியை முதலிலே கூறிவிட்டுப் பிறகுதான், தார்வேந்தனைக்கார்நிறக் கூந்தலார் குளிக்குமிடத்திலே நின்றதாக ஆசிரியர் காட்டுகிறார். எவ்வளவுவரம்புபாருங்கள்?

தெளித்தநீரே துகிலை நனைத்து மறை விடஒளியைப் புறத்துஅளித்து விட்டதாமே, கம்பனின் ஓடமேறிய மாதர் காட்சியின்படி. நீரிலேயே மூழ்கி விளையாடிக் கொண்டிருந்த நங்கையரின்நிலை எவ்வண்ணம் இருக்கும். இங்கும் அதுதான்! ஆனல் என்ன சொல்கிறார் கவி. நளன், "நாமோயார் கண்களிலும் தென்பட மாட்டோம், நமது கண்களுக்கோ எல்லாக் காட்சிகளும் உள்ளது உள்ளபடி தெரியும். இங்கோ அழகியமாதர்கள்! நீராடுகிறார்கள்! அங்கதரிசனம் தங்குதடையின்றி கிடைக்கிறது! அரிதரிது இதுபோலச் சந்தர்ப்பம் கிடைப்பது! ஆகவே இங்கேயே நிற்போம், இன்னும் பல காண்போம், களைப்புநீங்க, களிப்புப்பொங்க" என்று எண்ணினன் நளன் என்பதாகக் கவிகூறினரா? அல்லது அத்தகைய எண்ணம் அவனுக்கு உண்டானது போலும் என்று நூலைப்படிப்பவர்கள் சந்தேகிக்கக் கூடியவிதத்திலே, ஏதேனும் உரைத்தாரா? போகட்டும், கண்டான், களிகொண்டான் என்று கூறினரா? அயோத்தி ஆடவர், மாதரின் மறைவிட ஒளிபுறத்தளித்ததும் ஆயர்வுநீங்கினர்என்று கம்பர் சொன்னுரே, அது போல அதிவீரராமபாண்டியன் கூறுகிறாரா? இல்லை! இல்லை! தற்செயலாக இக்காட்சியைக் கண்டான் காவலன், கண்டதும், காணக்கூடாததைக் கண்டுவிட்டோமே என்று கருதிக் கண்களை மூடிக்கொண்டான் என்று கூறுகிறார். கண்களை மூடிக் கொண்டான் என்றால், வெறும் பாவனைக்கு மூடிக்கொண்டானு? இல்லை, உண்மையிலேயே! சில வைதீகர்கள், கண்களை மூடிக் கிடப்பது போலக்குளத்தருகே அமர்ந்துகொண்டு, அங்கு வந்து போகும் அரிவையர்மீது, கடைக்கண்ணைச் செலுத்துகின்றனரே அதுபோல நளன் நயனங்களைமூடினது போலப்பாசாங்கு செய்துவிட்டு, கொஞ்சம் "ஓரப்பார்வை" செலுத்தினனு? இல்லை, இறுக மூடிக்கொண்டான். மங்கையரின் நிர்வாணக் கோலத்தைத்தான் பார்

(5-ம் பக்கம் பார்க்க)

ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வாநதர் கீழ்வீதி, கும்பகோணம்.

# சைவர்கள் சற்சூத்திரர்கள் ஆனதெப்படி?

(கைவல்யம்)

நான் சைவர்களைக் குறைகூற வேண்டும், நிந்திக்கவேண்டும் என்கிற எண்ணத்தால் இந்தவியாசம் எழுதவில்லை. என்புத்திக்கு எட்டிய வரையிலும் தெரிந்த வரையிலும் எழுதுகிறேன். புராணத்தையும் பழைய கதைகளையும்எழுதுகிறேன் என்று நினைக்காதீர்கள். நம் சீர்கேட்டுக்கும், சிதைவுக்கும் மூல காரணம் புராணங்களும் பழைய கதைகளுமேயாகும். நமக்குப்பலமென்று நாம்கருதிய முறைகள் எல்லாம் நம்மைத் துற்பலமாக்கிவிட்டன. நாம்கண்ணைத்திறந்திருத்தல், தூங்குதல்,உண்ணல், கட்டல், குடித்தல், கலியாணம்பண்ணுதல், பாடைஏறுதல். முதலியசகல காரியங்களையும் பிறருடைய ஆணைப்படியே செய்துவரக்கற்றுக் கொடுத்தன.

மேற்கான ஆங்கிலம் கிழக்கான நம்மை எல்லாம் ஆளச்சம்பந்தப்படுத்திக்கொண்டு நம்காப்புச்சுவர்களைஇடித்துநம்களஞ்சியங்களுக்கு மத்தியில் உட்கார்ந்துகொண்டது. பந்து, சிநேகிதன் என்றுவது சொல்லுகிறதா? இல்லை. வெளுப்பு, கருப்புஎன்றே சொல்கிறது. அதுபோலவே வடக்கானஆரியம் தெற்கான நம்திராவிடத்தை அடிமைகொண்டது. நம்முடைய எல்லா முறைகளிலும்புகுந்து நடுவே உட்கார்ந்துகொண்டது. நம்மைச்சமமாக நினைப்பதில்லை. சங்கீதமேடையில் பாடகன் உட்காரும் இடத்தில் சைவனைக்கூட அவர்களுடையதாசிமகன் என்கிறது. மேற்கானது கிழக்கிலிருந்து போய்விடுவதாகச் சொல்லவந்திருக்கிறது, சொல்லுகிறது. ஆனால் வடக்கோ அந்த அசம்பாவிதத்தை எப்பொழுதும் தெற்கில் வைத்துக்கொண்டே பிழைத்து வருகிறது. சைவர்களே! நம்முடைய சரித்திரநாடகம் இப்படியே ஆடவேண்டுமா? இதற்கு நெறிப்படிஒரு தீர்ப்புச்செய்யாமல் இன்னும் சோகநாடகத்தை அனுபவித்துக்கொண்டே இருப்பதாஎன்பதைக் கவனித்துப்பாருங்கள்.

முன்னோர்கள் பழைமையைப் பற்றிச் சண்டைபோட்டார்கள். வேதாந்த சித்தாந்தச் சிறிது பெரிதில்தர்க்கம்பண்ணினார்கள். உங்கள் தெய்வம் எங்களுடையதா?எங்கள் தெய்வம் உங்களுடையதா என்பதில் வாதம் செய்தார்கள். நான்மறை யாருடையது என்பதற்கு மறுப்புக்கு மறுப்பு எழுதினார்கள். ஒன்றிலும் ஜெயமடையவில்லை. நாம் பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம்,ருத்திராட்சரம் இன்னும் பலமந்திரங்கள் பக்தியோடு ஜெபித்தோம், பலன் அடையவில்லை. பல கோயில்கள் கட்டினோம், பலதெய்வங்களைக் கும்பிட்டோம்; அந்தக் கோயில்களும், தெய்வங்களும்,கும்பாபிஷேகங்களும், குருபூஜைகளும் வடக்கே பார்க்கிறதே அல்லாமல் தெற்கே திரும்பிப் பார்ப்பதே இல்லை. அந்தமந்திரங்களும், சீரழிக்கும் செல்லரித்த ஏடுகளும் உபயோகப்படவில்லை என்று கண்டோம். ஒருபாடகத் தென்னாட்டுச் சைவனுக்கும் அவன்பாஷைக்கும் இருக்க இடமில்லை என்றால், மற்றெல்லாவற்றிற்கும் இருக்கஇடம் கொடுக்க அவைகளுக்குச் சக்தி இருக்குமா? இப்பொழுதுஎல்லாச் சக்தியுமுடையமந்திரம்கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. அந்த மந்திரத்தைஜெபித்துப் பலனடைவதற்கு நமக்குள்உள்ளசில்லரைச்சண்டை, அற்பப்பகை, அந்தரங்கப் புரட்டு, சாதிப் பெருமை முதலியவைகளை விட்டுவிடவேண்டும். அந்தமந்திரம் நம்முடையது, நமக்கு உரிமையானது, உண்மையானது. அந்தமந்திரம்தான் "திராவிடநாடு திராவிடருக்கே" என்பது, பெரியார்கண்டு பிடித்தது. அந்தமந்திரத்தைப் பலர் ஜெபிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதன்பலனும் தெரிகிறது. சர். சி. பி. அவர்கள் போனவருடம் தமிழைப்பற்றி செய்தபிரசங்கத்திலும் இந்தவருடம் செய்த தமிழைபற்றின பிரசங்கத்திலும் தெரிந்துகொள்ளலாம். அதுவுமல்லாமல் சேலம் பிராமணர்கள் மாநாட்டுத் தலைவராக இருந்து அவர் செய்த தலைமையுரை செவ்வையாகத் தெரியப்படுத்துகிறது.

## சைவர்கள் சூத்திரர்களான விதம்.

சைவம் கைலையங்கிரி, இமயகிரி, பொதிகைகிரி என்பவைகளில் எதிலிருந்து வந்தது? முதன்முதல் கங்கையில் குளித்ததா, காவேரியில் குளித்ததா? அகஸ்தியர் கொண்டு வந்தாரா? வேதவியாசர் சொன்னாரா? சூதபுராணிகர் கேட்டாரா? சங்கராச்சாரி பிரம்ம சூத்திரபாஷியத்திற்குள் இருந்ததா? நீலகண்ட சிவாச்சாரியார் அந்தப்பாஷையிலிருந்து நிலைநிறுத்தினாரா? என்பவைகளை எல்லாம் பண்டிதசாஸ்திரிகள் முன்னமே தர்க்கப்பண்ணி இருக்கிறார்கள். அவைகளைப் பண்டிதர்களுக்கு விட்டுவிட்டுச் சைவர்கள் சற்சூத்திரர் ஆன விதத்தையும், சைவனுக்கும் அவன் பாஷைக்கும் சங்கீதமேடையில் இடமில்லாமற் போனதையும் சுருக்கிச் சொல்லுகிறேன். சைவர்களெல்லாம் ஒரே ஜாதியார்கள். பூர்வீகத் திராவிடர்களே. புராணங்களையும் இலக்கண இலக்கியங்களையும் சில சைவர்கள் படித்திருந்தார்கள். இவர்களுக்குக் கோயில் மடம் இவைகளின் பராமரிப்பு இருந்தமையால் சமயப்பற்றும் சாஸ்திரப்படிப்பும் இருந்தது. சிலர் சிறிது வடமொழியும் தெரிந்திருந்தார்கள். பிராமணர்களைப்பின்பற்றி அவர்கள் அபினயங்களையும் பழகிக்கொண்டார்கள். அதில்சில சைவப் பண்டிதர்கள் எங்களைச் சூத்திரர்கள் என்று சொல்லுகிறீர்களே அது சரியல்ல என்று பிராமணர்களைக் கேட்டார்கள். அதற்குப் பிராமணர்கள் "நீங்கள் சூத்திரர்களாயிருந்தாலும் அந்தச் சூத்திரர்கள் அல்ல. நீங்கள் சற்சூத்திரர்கள் என்றார்கள். வழக்கத்திலில்லாத பாஷையின் இலக்கணத்தைக் காட்டி அவர்கள் கண்டதும் கேட்டதும் இல்லாத நாலு சுலோகத்தைச் சொல்லி அது கடவுளின் திருவாக்கால் சொல்லப்பட்டு வேதத்திலிருக்கிறது என்றார்கள். சைவ பண்டிதர்களுக்கு அதற்குமேல் ஆலோசனைசக்திபோகவில்லை, அர்த்தமும் அறியவில்லை. சற்சூத்திரன் என்பதைப் பக்தியோடும் திருப்தியோடும் ஏற்றுக் கொண்டார்கள்.

சிவபெருமானுக்கு நடந்தகலியாணத்தில் பூமியின் வடகோடு தாழ்ந்தது; தென்கோடுஉயர்ந்தது. அகஸ்தியர் வடகோட்டிலிருந்து தென் கோட்டிற்குப்போய் உட்கார்ந்தார்; இரண்டுகோடும் சமமாயிற்று; போகும்போது கங்கையிலிருந்து தண்ணீரைக் கமண்டலத்தில்நிறைத்துக்கொண்டுபோய்த் தென் கோட்டில் ஊற்றினார்; காவேரி உண்டாயிற்று என்றிருப்பதை நம்பும் சைவர்களும், அதை அப்படியே பிரசங்கம் செய்யும் காலேஜ் பெரியபண்டிதர்களும்இந்தக் காலத்தில் இருக்கையில், சற்சூத்திரன் என்பது கடவுள் திருவாக்கு, வேதத்திலிருக்கிறதுஎன்று பிராமணர்கள் சொன்னதை, அந்தக்காலத்துச் சைவர்களும் சைவப் பண்டிதர்களும் நம்பினதில் ஆச்சரியமில்லை. அந்தக் காலத்துச் சிவபெருமான் கைலையங்கிரியிலிருந்து சைவர்களுக்கு வருவதும் போவதும், காட்சியளிப்பதும், சீட்டெழுதுவதும், பாட்டுக்கு முதலடி எடுத்துக்கொடுப்பதுமாயிருக்கையில், சற்சூத்திரன் என்பதைக் கடவுள் வாக்கு என்று நம்பாமலிருக்கவழியுமில்லை. ஸ்மார்த்தபிராமணர்களைப் பிரசன்ன பௌத்தன் என்று சைவர்கள் சொல்லுவதும், சித்தாந்த சாஸ்திரங்களை அபரவித்தை என்பதும் பிராமணர்கள் தான், அம்மன் முலைப்பாலுண்டவரும்; சிவபெருமானின் அழகில் இருந்து வந்தவரும் பிராமணர்கள் தான். சைவ ஆச்சாரிகள் தான். இதை எல்லாம் சைவன் நம்புகையில் பிராமணன் சைவனைச் சற்சூத்திரன் என்று சொல்லுவதை நம்பாமலிருக்க எப்படிமுடியும்? அதுவுமன்றி மகம்மது கஜனி சோமநாதபுரக் கோயிலைக் கொள்ளையடிக்கையில், அந்தக்கோயிலில் பதினோராயிரம் அர்ச்சகர்கள் இருந்தார்கள். அதில் எண்ணூறுபேர் தவிரமற்றவர்கள் ஓடிப்போய் விட்டார்கள். அதில் மூவாயிரம் பேர் சிதம்பரம் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு அங்கிருந்த தமிழர்கள் இடம் கொடுத்தார்கள். பனிரெண்டு சிவலிங்கதலங்களில் சோமநாதமும் ஒன்றானதாலும், சோமநாத சிவலிங்கப்புரட்டில் பெயர் பெற்றதாலும் அங்கே அர்ச்சகர்களாக இருந்திருந்ததாலும்,சமணபௌத்தமதங்களை ஒழிக்கக் கோயில்கள் உண்டாகியிருந்ததாலும், ஆகம வேத விவகாரங்கள்இருந்ததாலும் நல்ல இடம் கிடைத்ததென்று வேதவைதிக மதத்திற்கும் ஆகம சைவ மதத்திற்கும் மத்தியிலிருந்துகொண்டு கைலையில் சிவபெருமான் காளியோடு ஆடின அறுபத்து நான்கு ஆடல்களையும் சிவன் சிதம்பரத்தில் நடராஜரூபத்தில் ஆடினார் என்றார்கள். தாங்கள் கைலையங்கிரியிலிருந்து சிவனுடன் வந்தவர்கள் என்றார்கள். இதைக்கைலையங்கிரி பரம்பரை என்று தங்களைச்சொல்லிக்கொள்ளும் சைவர்கள் நம்பவேண்டியதாயிற்று. அந்தப்பிராமணர்களுக்குத்தான் தீட்சிதர்கள் என்று பெயர்.

சுந்தரமூர்த்தியால் தொண்டர் பெயர் சொல்ல, சிவபெருமான் அடிஎடுத்துக்கொடுக்க,சேக்கிழார் பெரியபுராணம் பாடி அதில் தன்னைச் சற்சூத்திரன் என்று பெருமையாகத்தன் குலப்பெருமையைச் சொல்லித் தீர்மானமும் செய்தார். சேக்கிழார் சைவப் பண்டிதர் மட்டுமல்ல, சிவபெருமானின் அருள் பெற்றவர், கூட இருந்தவர்; அவர் வார்த்தை பொய்யாகுமா? தவிர்க்கமுடியுமா? அன்று விழுந்த அடியின் அதிர்ச்சிதான் இன்று வரையிலும் சைவர்களையும் மடாதிபதிகளையும் பார்ப்பனர்கள் காலில் விழுந்து கொண்டிருக்கும் படியாகச் செய்தது. சைவத்தில், பெரியசைவரான தண்டபாணிதேசிகர் சங்கீத சபையில் பாடினால் தீட்டுப் பட்டுவிடுமென்றார்கள். அதனாலே தான் இவ்வளவுக்கும் காரணமாகஇருக்கும் பெரிய புராணத்தைச் சுயமரியாதைச் சங்கம் குற்றம் சொல்லுகிறது. கோயில் தொழிலில் ஈடுபட்ட சைவர்களுக்கு ஓதுவார், தேசிகர், பண்டாரம் என்று பெயர்.

சற்சூத்திரன் என்பதற்கு அர்த்தம்என்னவென்பதை அந்தக்காலத்துச்சைவப்பண்டிதர்கள் கவனிக்காவிட்டாலும் சற்சூத்திரன் என்றால் நல்ல ஒழுக்கமில்லாதவன், நன்னெறி கெட்டவன், என்று தானே அர்த்தம் என்று சுவாமி வேதாச்சலம் சொன்னார், அதிலும் பெரிய பண்டிதர்கட்கு மயக்கம் தெளியவில்லை. சுயமரியாதைச் சங்கம் அழுத்தந்திருத்தமாக அநேக தரம் சொல்லியாயிற்று. அதைக் கேட்டுப் பெரிய பண்டிதர்கள் கோபித்தார்கள், கோபிக்கிறார்கள்.

இத்தனை காரணங்களுடன் இன்னொருகாரணத்தைத் தங்களுக்கு மேலாகவும் திருப்தியாகவும் நினைத்துக்கொண்டார்கள். அதாவதுதாங்கள் பிராமணர்களுக்கு அடிமையான சூத்திரர்களாக இருந்தாலும் தமக்குக்கீழே அநேக சூத்திரர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கீழாக நினைத்து நாம்உயர்வாகட்டப்போம் என்று கருதியே கட்டுக் கட்டாக விபூதி பூசினார்கள். சம்புடம்வைத்துக்கொண்டார்கள். உருத்திராட்சமாலை அணிந்துகொண்டார்கள். ஜெபமணியும் கையில் எடுத்துக் கொண்டார்கள். சைவ ஆகம சித்தாந்த சாஸ்திரங்களைப் படித்தார்கள். தேவார திருவாசக பாட்டுகளில் பலதைப்பாடம் பண்ணினார்கள். பாடினார்கள், பக்தி செய்தார்கள். சிவலிங்க பூசைபண்ணினார்கள். எந்த இடத்திலும் இவர்களைச் சூத்திரர்களாகக் கண்டார்களேயல்லாமல்,அவர்களைக்கண்டவுடன் சாகாமலிருக்கும் சிவலிங்கத்தைக் காணவில்லை.வேதஸ்மிருதிகளைபற்ற ஜாதிக்காரர்கள் படிக்கக் கூடாதென்று பிராமணர்கள் விதிபோட்டதுபோலவே தேவாரப் பள்ளிகளில் மற்றச்சூத்திரப்பிள்ளைகளைச் சேர்க்கக்கூடாதென்று சைவச்சூத்திரர்கள் விதியும் போட்டிருக்கிறார்கள். வேதஸ்மிருதிகளை பிரம்மா வாயால் சொன்னதென்கிறார்கள். தேவார திருவாசகத்தைச் சிவன் காதில் கேட்டதென்கிறார்கள்.பிரம்மாவின் வாய்சொல்லிற்றோ, சிவனுடைய காதுகேட்டதோ அது எப்படியோ இருக்கட்டும் தெய்வங்கள் வாயில் சொன்னதையும் காதில் கேட்டதையும்எல்லாரும்படிக்கவும் கேட்வும்கூடாதென்று சொல்லும் பக்தகோடிகள் இருக்கும் தேசம் நல்லதாகுமா? ஒற்றுமையும் அறிவும் விருத்தியாகுமா? எந்தத்தேசத்திலாவது இத்தகையக் கூட்டங்களுண்டா? தான் சொன்னதையும் கேட்டதையும்ஒருசிலரிடம்சொல்லி, மற்றவர்களுக்குச் சொல்லாதே, சொல்லியும் கொடுக்காதே என்று ஒரு தெய்வம் சொல்லியிருந்தால் அதுதெய்வமாகுமா? அந்தத்தெய்வத்தால்ஆஷாடபூதிகளுக்கு வயிறுநிறையுமேயல்லாமல்மற்றவர்களுக்கெல்லாம் என்னநன்மையை அளிக்கும்? எல்லாம்பிரம்மமயம்,எங்கும் நிறைந்தது சிவம் என்கிற நியாயமான உலகப்பொதுவிதிக்கு ஏற்ற தெய்வங்களே நமது நாட்டிலிருக்க வேண்டும். உலகப் பொதுவிதிக்கு விரோதமாக இருக்கவோ இருந்து கொண்டோ இருக்கும் தெய்வங்கள் நமது தேசத்தைவிட்டுப்போய் விடவேண்டும். மனிதன் அருகே போனால் செத்துப்போகும் தெய்வங்கள் நமக்கு வேண்டாம். எதற்கும் எப்பொழுதும் சாகாமலிருக்கும் தெய்வமே நமக்கு வேண்டும் என்று சுயமரியாதைச் சங்கம் சொல்லுகிறது.

---

### திருமணம்

7—4—46ல் காரைக்கால் தோழர் நல்லானன்—ஆச்சியம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தின் நினைவாகத் "திராவிடநாடு" வளர்ச்சிக்கு ரூபா 1. தரப்பட்டது.

திராவிட நாடு

காஞ்சி 14—4—46 ஞாயிறு

# அதுதான் சரி!

★

'நீங்கள் ஒரு சமாசத்துக்கு வந்தாலும் சரி, வராவிட்டாலும்சரி, நாங்கள் வெளியேறப்போவது நிச்சயம் என்று அறிவித்துவிடுவதே சிறந்தவழி''

என்றுபிரிட்டிஷ்பத்திரிகைஒன்று எழுதியிருக்கிறதாம். சிலாக்கியமானயோசனை; அதனைச் சீக்கிரத்திலேயே பிரிட்டிஷ் சர்க்கார் அமுலுக்குக்கொண்டுவருவது நல்லது என்று நாம் கூறுகிறோம், வெளி ஏறவேண்டியவர்களுக்கு.

மூன்றுவது கட்சி ஒன்று இருக்கிறது, அதனுலேயே இங்கு வர்க்கப்போர், வகுப்புப்பூசல், ஜாதிச் சண்டை முதலியன மூண்டு, சமரசமோ, முன்னேற்றமோ ஏற்பட மார்க்கமில்லாமல் போய்விட்டது என்று, காங்கிரஸ்கட்சி அடிக்கடி சொல்லிவருகிறது. உயிர்ப்பிரச்னைகள் பலவற்றைப் பழங்கலத்தில் போட்டுப்பரணைமீதுவைத்துவிட்டு, எல்லாம் இந்த வெள்ளைக்காரர்கள் வெளி ஏறின பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்று காங்கிரஸ் கூறிவருகிறது. நாளாகவாக பிரிட்டிஷ்ஏகாதிபத்யத்தினுல் ஒருபுறம் நாட்டுக்குக் கஷ்டநஷ்டம்ஏற்படுவதுடன், சீர்கெட்ட சமுதாயத்தின் நிலைமைமேலும் மேலும் அதிகரித்த, அழுகிவருகிறது. சமுகக்கொடுமைகளும் அநீதிகளும், உரம் பெறுகின்றன. இவைகளை ஒழித்துப், புது உருக்காக்கும் உண்மையானநோக்கம், காங்கிரசுக்கு இருக்கிறதா, அல்லது சமுதாயத்தின் சீர்கேடுகளை விட்டுவைத்து, அதிலே சிலருக்குச் சுகாதார அதிகாரி வேலை கொடுத்துவைக்க விரும்புகிறதா, என்பதைப் பரீட்சித்துப் பார்க்க, சந்தர்ப்பம் இல்லை—அது ஏற்பட வேண்டும் — விரைவாக. ஆகவே நாம், பிரிட்டிஷார்வெளிஏறவேண்டும் என்ற யோசனையைச் சொல்லளவிலே நிறுத்திவிடாமல் செயலிலேகாட்டும்படி கூறுகிறோம்.

பந்தசாம்ராஜ்யத்தை ஒருகாலத்தில் ஆளமுடிந்தது பிரிட்டனுல் கடலிலே கலம்விட்டும், ஆங்காங்கு இருந்த பலகலத்துப்போன சமுதாயங்களை, அதே நிலையில் விட்டு வைக்கும் தந்திரத்தாலும். இன்று, அந்த முறையைக் கண்டிக்காதவர்கள் கிடையாது.

பிரிட்டிஷார், மதவிஷயத்தில்தலையிடுவதில்லை என்று வாக்குறுதி கொடுத்ததை, அவர்களுடைய பெருங்குணம் என்றனர் சிலர், இங்குள்ளோர், நல்லாட்சியின் நற்பண்பு என்றனர்.

நாம், அந்தப்போக்கைப் பலமாகப்பலகாலமாகக் கண்டித்து வந்திருக்கிறோம். மத விஷயத்திலேநடுநிலைமை வகிப்பதாகக் கூறிக்கொண்டு, சமுதாயத்திலே சுறண்டி வாழ்பவர்கள், சுகபோகிகள் ஆகியவர்கள் கொழுக்கவும், பாடுபடுபவன், நாடாண்டவன் நலியவுமான நிலைமை வளருவதைக் கண்டும், அந்தநிலைமை மதத்தின் பெயராலேயே, காப்பாற்றப்பட்டு வருவதைத் தெரிந்தும், "நாங்கள் என்ன செய்வோம்! அவர்களின் மதம் அப்படிப்பட்டது! நாங்கள் மதவிஷயத்திலே தலையிடுவதில்லை'' என்றுகூறி, வெளிஉலகு இங்குள்ள நிலை கண்டு கேலி செய்யவும், மேயோக்கள் நையாண்டி செய்யவும், பார்லிமெண்டுகளிலே பரிகாசப்பேச்சுப் பேசவும் சந்தர்ப்பம் உண்டாக்கித் தந்ததுதான், பிரிட்டிஷ் கொள்கையினுல் ஏற்பட்ட விளைவு; இந்தப் போக்கை நாங்கள் கண்டிக்கிறோம், என்ற தீர்மானத்தை, திருச்சியில் நடைபெற்ற திராவிடர்கழக மாகாண மாநாட்டிலே நாம் நிறைவேற்றி இருக்கிறோம்.

அறிஞர் ராதாகிருஷ்ணன், அமெரிக்காவில்,

"ஜனங்களின் மதசம்பந்தமான சம்பிரதாய விஷயங்களிலே தலையிடுவதில்லை என்றகோள்கையைப் பிரிட்டிஷார் அனுஷ்டித்து வருவதால், வேதகாலத்துக்கு முன்பே மறைந்துஒழிந்து போயிருக்க வேண்டிய பல சமுகக் துரோதங்களுக்கு, தங்களைஅறியாமலே பிரிட்டிஷார் நல்ல பாதுகாப்பை அளித்து அவைநீடித்திருக்கஉயிர்கொடுத்து விட்டனர்கள்'' என்று பேசியிருக்கிறார். உண்மை! அப்படி உயிர் கொடுத்து விட்டதிலே முக்யமானது பார்ப்பனியம் — உலகிலே வேறெங்கும் இல்லாத அக்ரமம்! உலகிலேவேறு எங்கும் தீண்டாமை இல்லை. இங்கு இருக்கிறது. இதற்காக வெட்கப் படுவோர் இல்லை.

உலகிலே வேறு எங்கும் சமுதாயம் இத்தனை ஜாதிகளாகப் பிளக்கப்பட்டு இல்லை, இங்கு இருக்கிறது, அது போகவேண்டுமென்பவர்கள், நாத்திகராக்கப்படுகின்றனர்.

அர்த்தமற்ற, ஆபாசமான, அநாச்சாரமான கோட்பாடுகள் உலகிலே இன்று எங்கும்இல்லை, அவை அத்தனையும் இங்கே பூத்துக்காய்த்துக் கிடக்கின்றன.

போப்பாண்டவர் பாவ மன்னிப்புச் சீட்டுவிற்பதில்லை, புரோகிதக் கூட்டம், இங்கே அந்த வேலையைவிடவில்லை.

கிருஸ்தவ மடாலயங்கள், அறிவாலயங்களான பள்ளிக்கூடங்களையும், அன்பாலயங்களான ஆஸ்பத்திரிகளையும் அமைக்கின்றன. இங்குள்ள மடாலயங்கள், "கண்கவர் பூஷணங்கள் அணிந்தேகட்டிலறை நோக்கிப் பெண்கள் பல பேர்கள் குலவிப்பின்வர முன் நடந்தார்'' என்ற நிலையிலே உள்ளன.

சேறுன அகழிகள், கலனை கோட்டைகள், பிளவுபட்டபாதைகள், இடிந்து கிடக்கும் அரண்மனைகள், இருண்ட இடங்கள், சமுதாயம் இந்நிலையில் இருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியோ, இவைகளைத் திருத்தவில்லை; திருத்தாது; திருமுகம் மதத்திலே தலையிடுவதில்லை என்று தந்தாகிவிட்டது. இவைகளுக்கு இடையே, விஞ்ஞானம் உலவ விடப்பட்டிருக்கிறது, விதவைக்குத் தரப்படும் வெள்ளைச் சேலை போல! இந்தநிலைமாறவேண்டும் என்றுல், வெள்ளையன் போக வேண்டும் என்று கூறுகிறுர்கள். போய் விடுங்கள், பிறகு அதுநடக்கிறதா இல்லையா என்று நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், இடையே நீநின்று கொண்டிராதே, என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்குக் கூறுகிறோம். உடனடியாக அமைவது சனுதன ஆட்சியாக இருக்கும், ஆனல் கவலை இல்லை, அப்போது தான், நமது மக்கள், யார் நண்பர்கள், யார் நரிஉள்ளமும் மனித உருவமும் பெற்றவர்கள் என்பதைச் சுலபத்திலே புரிந்து கொள்ள முடியும். "அவனும் போய்த் தொலைந்தானே! இன்னமும் இந்த அக்ரமம் இருப்பது அழகா?'' என்று மக்கள் ஆத்திரத்துடன் கேட்கத் தொடங்குவார்கள், சமுக அக்ரமங்களைக் காணும் போதெல்லாம். அந்த மகத்தான புரட்சி ஏற்படவேண்டும், அதற்காகவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்யம், வெளியேற வேண்டுமென்று விரும்புகிறோம்.

சலிப்பினுலோ, அல்லது கேலிக்காகவோ, அந்த பிரிட்டிஷ் பத்திரிகை எதற்காக அவ்விதம் எழுதியிருந்தாலுஞ்சரி, அதைப்பற்றிக்கவலையில்லை. பிரிட்டிஷார் வெளிஏறப் போவதாக உடனே அறிவித்துவிட வேண்டியதுதான். அதுதான்சரி.

●

## பயனற்ற பேச்சு

பாகிஸ்தான் விஷயமாக முஸ்லிம் லீகும் காங்கிரசும் ஒரு முடிவுக்கு வரமுடியாத பட்சத்தில், அதனைச் சர்வதேச சங்கத்தாரின் முடிவுக்கு விட்டு விடலாமென்று காந்தியார் கூறிய யோசனையை, சர்வதேச சங்கஸ்தாபனமும், மற்றும் லண்டன், நியூயார்க்முதலான இடங்களில் உள்ள அதிகாரவட்டாரங்களும் ஏற்றுக் கொள்ளாதென்று தெரிகிறது.

இந்தியா, சர்வதேச சங்கத்தில், ஒரு சுயேச்சையான அங்கத்தினர் நாடாயிருப்பதால், அதன் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச சங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று சாசனம் இருப்பதாகச் சர்வதேச சட்ட நிபுணர்கள் கூறியுள்ளனர்என்றும், இக்கருத்தையே கன்ஸர்வேட்டிவ் கட்சியனரும், லிபரல் கட்சியனரும் வலியுறுத்தியுள்ளனர் என்றும் தெரிகிறது.

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே இந்நாட்டை ஆண்டு வரும் பிரிட்டிஷாரால், இந்நாட்டிலுள்ள மக்களின் நிலைமையைத் தெரிந்து, அவர்களுக்கிடையே எழுந்துள்ள தகராறுகளைத் தீர்த்து வைக்க முடியாதென்றுல், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாத அல்லது தலையிடவேண்டிய அவசியத்தில் இல்லாத சர்வதேச சங்கம், இங்குள்ளவர்களின் நிலைமைகளையும், தேவைகளையும், அவசியங்களையும் அறிந்து அதற்கான பரிகாரத்தைத் தேடுமென்று கூறுவது பயனற்ற பேச்சேயாகும். அதிலும், ஒரு விஷயத்தில் சம்பந்தமில்லாத ஒருவரை, அதில் சம்பந்தப்படுத்தி, அவரால் அந்தக்காரியத்தை முடித்துவைக்க முடியுமென்று கருதுவது, எடுத்துக் கொண்ட விஷயத்தை எப்படியாவது தட்டிக்கழித்து விடவேண்டுமென்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கமுடியுமேயன்றி, உண்மையிலேயே அந்த விஷயம் பாரபட்சமற்ற முறையில் தீர்க்கப்படவேண்டுமென்ற நோக்கத்தோடு செய்யப்படும் காரியமல்லவென்பதை, அரசியலறிவுள்ள எவரும் ஒப்புக்கொள்வர்.

முஸ்லிம்லீக் கோரும்பாகிஸ்தான் திட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டதென்பதை பலகாலமாக இந்நாட்டை ஆண்டுவரும் பிரிட்டிஷ் சர்க்காரும், பாகிஸ்தானை எதிர்க்கும் காங்கிரசுமே உணர முடியுமன்றி, இதற்குச் சம்பந்தமில்லாத சர்வதேச சங்கம் இதனை உணரவோ அல்லதுமேல்வாரியாக உணரும் வாய்ப்பு ஏற்பட்டாலும் அதற்கானபரிகாரத்தைத் தேடவோ முடியாதென்பதை, இவ் விஷயத்தைச் சர்வதேச சங்கம் தீர்த்து வைக்குமென்று நம்புகிறவர்கள் உணராமலும், எந்தப் பிரச்னையாய் இருந்தபோதிலும், அது எவ்வளவு முக்கியத்வம் வாய்ந்ததாய் இருந்த போதிலும், அதனுல்நாட்டுக்கு ஏற்படும் பலாபலன்களையும் யோசியாமலும், எடுத்துக்கொண்ட விஷயத்திற்குச்சம்பந்தமில்லாதுபேசுவது, உண்மையிலேயே பயனற்ற பேச்சாகும் என்பதை அத்தகையினர் உணர வேண்டும்.

"பாகிஸ்தான் கோரிக்கைக்கு இந்துக்கள் இணங்கினுல், எமது நண்பர்களாகலாம்; பிரிட்டிஷார் பாகிஸ்தான் தர இசைந்தால் எமது நேசர்களாகஇருக்கலாம்; இருவரும் இணங்காவிடில், எங்களுக்கு ரஷியா பாகிஸ்தான் தரும்.''

**சர். பிரோஸ்கான்நூன்.**

மதிப்புரை

### "பாராளுமன்றம்''

●

இயற்றியவர் பி. எம். ரெட்டி; கிடைக்குமிடம்:— ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம் 53–56, பவளக்காரத்தெரு, சென்னை; விலை அணுபத்து.

இந்நூலின்கண், ஆங்கிலஅரசாட்சியின் ஆரம்பகாலம்முதல் இன்றுவரை, அதன் ஆட்சியின் அமைப்புகள் எவ்வாறுஇருந்துவருகின்றன, யார்யார்எந்தெந்தக்காலத்தில்பாராளுமன்றத்தின் ஆதிக்கத்தை எந்தெந்தமுறையில் நடத்திவைத்தனர் என்பனபோன்றவிளக்கங்களும், அரசர்க்கும் பாராளுமன்றத்தினர்க்கும் உள்ள தொடர்புபற்றியும்; அரசர்க்குள்ள அதிகாரத்திற்கும், பாராளுமன்றத்தினர்க்கு உள்ள அதிகாரத்திற்கும் உள்ள வரம்புகளும், அவற்றுல் பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற பலாபலன்களும்; பாராளுமன்றத்தின் பிரிவுகளும், அவை எந்தெந்தக் காலத்தில் எப்படி எப்படி ஏற்பட்டன என்பதன் காரணவிளக்கங்களும் இந்நூலாசிரியரால் நன்குதெளிவு படுத்தப்பட்டுள்ளன.

இந்நூலைப்படிப்பதன் வாயிலாக, ஆங்கில அரசியலைப் பாராளுமன்றத்தினர் நடத்தும் முறைகளை நன்கு தெரிந்து கொள்ளலாம். நீதி, நிர்வாகம் ஆகிய துறைகளில் இருப்பவர்களுக்குஇந்நூல் நல்லபயன் தருமென்று நம்புகிறோம்.

★


### பிறப்பு

1–4–46ல் சேலம் செவ்வாய்ப்பேட்டைத்தோழர் பழனிச்சாமி அவர்களின் துணைவிக்கு ஒருபெண்மகவு பிறந்து, "திராவிடமணி'' என்றுபெயர் சூட்டப்பட்டதன் நினைவாகத் "திராவிடநாடு'' வளர்ச்சிக்கு ரூபா 2. நன்கொடை தரப்பட்டது.

### பெயர் சூட்டுவிழா

சேலத்தில் ரா. சு. அருணசலம் செட்டியார்குமாரர் ஆர்.ஏ. இராசமாணிக்கம்வாழ்க்கைத்துணைவி அனந்தலட்சுமிக்குப் பெண் குழந்தை பிறந்து 10–4–46ல் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்தலைமையில் காலை 11 மணிக்கு ரா. சு. அ, இல்லத்தில் பெயர் சூட்டு வைபவம் நடந்தது. குழந்தைக்கு பெரியார் அவர்களால் நாகம்மாள் என்ற பெயர்வைக்கப்பட்டது. விழாவிற்கு பலபிரமுகர்கள் வந்திருந்தனர். வந்திருந்த பிரமுகர்களுக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பெயர் சூட்டுவிழாவை முன்னிட்டு குடிஅரசுக்கு ரூ. 10, திராவிடநாடுக்கு ரூ. 10, நன்கொடை அளிக்கப்பட்டது.

"கௌரி பற்பொடி''




பல்லில் சீழ் இரத்தம் வரும் பயோரியாவை ஆச்சரியமாய் குணமாக்கி விடுகிறது. எல்லாஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. சாம்பிள் விலை விபரத்திற்கு எழுதவும்.

சரஸ்வதி வைத்தியசாலை
பழனி (S.I.)

# ★ மற்றோர் குட்டு ★

"என்னஅப்பாஇது? நான் எது கேட்டாலும், அம்மாவைக் கேட்டுச் சொல்கிறேன், அம்மாவைக்கேட்கிறேன்என்று சொல்லி விடுகிறாயே நீ சொல்லு. என் அம்மாவைக் கேட்கவேண்டும்?" என்று சிறுவன் கேட்கிறான், தன் தகப்பனை; அவன் அறியாதவன்தானே, அம்மாவின் வார்த்தைதான் அப்பாவுக்குச் சட்டம் என்பதை அறியவில்லை. அப்பா, என் எதற்கு எடுத்தாலும் அம்மாவின் சம்மதத்தைக் கேட்கிறார் என்று சந்தேகம் அந்தச் சிறுவனுக்கு. அவன் 'குடும்ப அரசு' முறை தெரிந்துகொள்ளாதவன்.

"ஹிட்லரைக் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்; ஜெர்மனி போய்வந்த பிறகு தெரிவிக்கிறேன்" என்று முசோலினி தன் சகாக்களுக்குச் சொன்னபோது, சிலருக்குக் கோபங்கூட வந்தது, இத்தாலிய நாட்டு வியவகாரத்தை முசோலினி நடத்தட்டுமே, இதற்கு ஜெர்மன் நாட்டுச் சர்வாதிகாரியின் சம்மதமோ கட்டளையோ, என் என்று கேட்டனர். அவர்கள் அறியார்கள் ஜெர்மன் நாசீசம், இத்தாலிய பாசீசத்தைத்தன் பணியாள் ஆக்கிக்கொண்டதை!

"கணக்கப் பிள்ளை வாட்டும்" என்று சொல்லும் முதலாளிகள் இருவகை; ஒரு சாரார் காலந்தாழ்த்துவதற்கு அதனைச் சாக்காக உபயோகிப்பவர்கள்; மற்றோர் சாரார் உண்மையிலேயே கடை விஷயத்தைக் கணக்கப்பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு, நிலைமையோ நடவடிக்கையோ தெரியாமல் இருப்பவர்கள்.

"ஐயர் வாட்டும் கேட்போம்" என்கிறார், அப்பாவி, பரம்பரைப்பழக்கத்தால்! அப்பாவிக்குப்புரிவதில்லை, ஐயரும் தன்னைப்போன்றவர்தானே, என் அவர் பேச்சை, எதற்கும் எடுத்துக்கொள்ள வேண்டும், என்பது.

இப்படி, "வேறு ஒருவரைக் கேட்டு நடக்கவேண்டிய நிர்ப்பந்தம்" தென்னாட்டுக் காங்கிரசுக்கு, இன்று நேற்றல்ல, நெடுநாட்களாக இருந்து வருகிறது. அதைக்கண்டு குமுறுவதும் பலநாட்களாக இருந்துவரும் நோய், இன்னும் தீர்ந்தபாடில்லை; தக்கமருந்துசாப்பிடாததால்.

தென்னாட்டவர், அரசியலில் மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் வடநாட்டுத் தலைமையைத் தாங்கும் சுமைதாங்கியாகிவிட்டனர். வலி அதிகமாகும்போது கொஞ்சம் கூக்குரல் கேட்கும், பிறகு மௌனம், சம்மதம்.

தென்னாட்டவர் மத விஷயத்தில் தலைமைப் பீடம் காசி என்றும், தேசியத்துக்குத் தலைமைக் காரியாலயம், வார்தா என்றும், தொழில் துறைக்கு பம்பாய் என்றும், கொண்டுவிட்டனர், பிரிட்டிஷாரும் தமது நிர்வாகத் தலைமைஸ்தானமாக, டில்லியைக் கொண்டனர். ஆக, டில்லி, காசி, வார்தா, பம்பாய், என்பவைகளின் போக்கு, தென்னாட்டை ஆட்டிவைக்க முடிகிறது. சர்க்காரிலாவது மாகாண சுயாட்சி என்ற பெயரால், தென்னாட்டவர் சட்டசபைகளை அமைத்துக்கொண்டு, பல்வேறு அதிகாரங்களைத் தாமே நிர்வகிக்கும் உரிமையை மெள்ள மெள்ள வழங்கினார்கள்.

காங்கிரசோ, நாளாகவாக, அதிகாரமத்தனையையும், வடநாட்டிலேயேஇறுக்கிக்கொண்டுவருகிறது. அங்கே இருந்து சூத்திரக் கயிற்றை இழுப்பதற்குத்தகுந்தபடிதான் இங்கு தலைவர்கள் தாண்டவமாட முடிகிறது, திட்டங்கள் உண்டாகின்றன! இங்குள்ள தலைவர்கள், சுயேச்சையாகச் செய்யக்கூடிய ஒரே காரியம், எதிர்க்கட்சியினரை எவ்வளவு வேண்டுமானாலும் திட்டலாம்! அது தவிர மற்ற அதிகாரங்கள் யாவும், அங்கே; ஆலைமுதலாளிகளும் அரசியல் யோகிகளும்ஒன்றுகூடி நடத்தும் தேசிய ஸ்தாபனம் தனது தலைமைக் காரியாலயத்தைவடநாட்டிலே அமைத்துக்கொண்டிருக்கிறது. நிலைமை அது. இனி, என் வடநாட்டுத் தலைவர்கள் நமது விவகாரத்தில் தலையிடுகிறார்கள் என்று கேட்பது, அறியாத பாலகனின் கேள்வி போன்றதுதான்.

"தினசரி" இதழுக்கு, இயற்கையாகவோ, அல்லது எதிர்க்கட்சியைத் திட்டித் திட்டிஉண்டான உரத்தாலோ அடிக்கடி ரோஷ உணர்ச்சி பீறிட்டுக் கிளம்புகிறது. பீறிட்டுக் கிளம்புகிறதே தவிர, அதுநாலெட்டுநாளைக்குமேலேநிலைத்தும் இருக்கமுடிவதில்லை.

பார்லிமெண்டரிபோர்டார், தமிழ், ஆந்திர, கேரள, காங்கிரஸ் தலைவர்களை, டில்லிக்கு வரும்படி தந்தி கொடுத்தனர்; போயிருக்கிறார்கள்; அவர்களை வழி அனுப்பிவைத்த பிறகு, 'தினசரி'க்குக் கோபம் கொஞ்சம் பிறந்தது. என், 'பிறகு' பிறந்தது? நமக்குத் தெரியாது! ஆனால், 'பிறந்ததே' அதுவே, சாமான்ய விஷயமல்ல!!

தினசரிகோபிக்கிறது, அல்லது கோபக்காரக் கோலம் பூண்டிருக்கிறது என்பது, 6-ந்தேதி வெளிவந்த தலையங்கத் தலைப்பிலேயே தெரிகிறது.

## மற்றொரு சூழ்ச்சி?

இது தலைப்பு! பார்த்தஉடனே ஒஹோ! பிரிட்டிஷார் மறுபடியும் ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள்போலும் என்று தோன்றும். விஷயம் பிரிட்டிஷாரைப்பற்றியதல்ல, சர்தார் படேலைப் பற்றியது.

படேல் அழைத்தார்; அதன்படி, தோழர்கள் மாதவமேனனும், பக்தவத்சலமும் பம்பாய் சென்று, படேலைக் கண்டு பேசிவிட்டுவந்தனர். மூன்று தினங்களுக்குள், மறுபடியும், தமிழ் ஆந்திர, கேரளத் தலைவர்களையும் வேறு சில M. L. A. க்களையும் டில்லிக்கு வரும்படி பட்டேல் தந்தி கொடுத்திருக்கிறார்.

பம்பாயில் பேசிய பின்பு மறுபடியும் டில்லியில் புதிதாய் என்ன பேசவேண்டி இருக்கிறது?

பட்டேலோ, ஆஜாதோ என் சென்னைக்கு வரக்கூடாது?

7-ந்தேதி கட்சிக் கூட்டம் போட்டிருப்பது தெரிந்தும் டில்லியில் இருப்பவர்கள் இங்கே வராமல் இங்கே இருப்பவர்களை டில்லிக்கு அழைப்பதுதான் ரொம்ப விசித்திரமாய் இருக்கிறது.

200-பேர்களுக்கு (M.L.A. க்களுக்கு) ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் கவனிக்காமல், போடப்பட்ட கூட்டத்தையும் நடக்கவிடாமல் செய்வதுகொஞ்சங்கூட நியாயமாகத் தெரியவில்லை.

மற்றொரு ஆஸப் அலி வேலை செய்ய யாரோ சூழ்ச்சி செய்கிறார்கள்.

யாரை (சட்ட சபைக் காங்கிரஸ் கட்சிக்கு)த் தலைவராகத் தேர்ந்தெடுப்பது என்ற விஷயம் கட்சியைச் சேர்ந்த பொறுப்பு. யார் வரவேண்டும் யார்வரக் கூடாது என்றுபார்லிமெண்டரிபோர்ட் சொல்லுவதற்கு அதிகாரமில்லை.

பழைய யோசனையை இந்தச் சந்தர்ப்பத்தில் நிறைவேற்றிவிடலாம் என்று பார்லிமெண்டரி போர்டு நினைப்பதாய் இருந்தால் அதைச் சென்னை மாகாணம் எதிர்த்தே தீரும்."

இவை "தினசரி"யின் வாசகங்கள்.

தலைமைக்காரியாலயத்தை "வடநாடு" என்று ஏற்றுக்கொண்டு, இங்கே ஒரு தேர்தல் பிரசாரம் நடத்துவதற்குக்கூட வடநாட்டுத் தலைவர்களை வரவழைத்து உற்சவம் செய்து, இங்கே வளைவுகளும் வாசகசாலைகளும், தோட்டங்களும் கட்டடங்களும், வடநாட்டுத் தலைவர்கள் பேராலேயே நிறுவி, அதுபோல வடநாட்டிலே, இங்குள்ள ஒரு தலைவருக்காவது மரியாதை செய்யவில்லையேஎன்பது பற்றிக்கடுகளவும் கோபமோ ரோஷமோ கொள்ளாமல் இருக்கும்போது, பம்பாயில்தான் பேசினேமே, டில்லியில் என்ன இருக்கிறது,என்றுகேட்பது, முன்புதான் குட்டினாயே, இன்னும் எத்தனை முறைதான் தலையில் குட்டுவது, என்று அழுகுரலில் கேட்கும் பாவனையில் பேசுவது போலிருக்கிறது. இது காரியத்துக்கேற்றதுமல்ல, தமிழகத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்றக்கூடியதுமல்ல. வார்தாவுக்கு வாழ்க்கைப்பட்டபிறகு, வேறு மார்க்கம் கிடையாது. தினசரியின் இந்த வீரம், காய்ந்த இடத்திலே ஊற்றும் தண்ணீர் போல, பார்த்துக்கொண்டிருக்கும் போதே உலர்ந்துபோய்விடும். எவ்வளவு திடீர்தைரியம் காட்டினாலும். காந்தியக் காங்கிரசின் முறையை இவர்களால் மாற்ற முடியப்போவதில்லை. சுபாஷ் பாபுவால் முடியவில்லை; அவர்நேத்தாஜியானபிறகுதான்அவருடைய படகு 'ஓட்டைப்படகு" என்று கூறினவர்களெல்லாம்கூட அவரைப்புகழ்கிறார்கள்; அதுவும் அவர் இல்லை, வரமாட்டார் என்ற நம்பிக்கையிலே! இந்நிலையில் தினசரியின் கோபம், சர்தார்படேலை என்னசெய்யும்?

சர்தார் விரும்பினால், ஆச்சாரியார் தான் சட்டசபைக் காங்கிரஸ் கட்சிக்குத் தலைவர், பிரதமமந்திரி! யார் தடுக்கமுடியும்? சில ராஜிநாமாக்கள் நடைபெறலாம்; அப்போதும்தினசரி ஆசிரியருக்கு, ராஜிநாமாச்செய்ய ஒன்றும் இல்லை!!

ஆச்சாரியார், வைசிராய்நிர்வாகசபையிலே வந்து புகுந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம், சில வடநாட்டுத் தலைவர்களைப்பிடித்துக்கொண்டால், அவர்களே படேலைக்கொண்டு, ஆச்சாரியாரைச் சென்னை மாகாணத்திலேயேபிரதமமந்திரியாக இருக்கச்செய்துவிட முடியும்.

பிடி வடநாட்டிலே இருக்கும்போது, இங்கே உள்ள காங்கிரஸ் தலைவர்கள், தங்கள் சுதந்திரம் பறிபோகிறதே என்று சோகித்துப்பலன் என்ன? போகத்தான் செய்யும்!

இது கொஞ்சங்கூட நியாயமல்ல— என்று தினசரி கூறுகிறது. ஆமாம். ஆனால், என்ன செய்யமுடியும்! தென்னாட்டுக்காங்கிரசால் புரட்சிக்கொடியை பறக்கவிடமுடியுமா? நாம் நம்ப முடியவில்லை. தினசரிக்கும் அந்த நம்பிக்கை இல்லை, ஆகவேதான் பார்லிமெண்டரி போர்டு பிடிவாதம்செய்தால், தென்னாட்டுக்காங்கிரஸ் எதிர்க்கும என்று கூறவில்லை, சென்னை மாகாணம் எதிர்க்கும் என்றுகூறுகிறது. நமது கழகத்தின்சார்பிலே கூறுகிறோம், வடநாட்டு ஆதிக்கத்தை நிச்சயமாகத் திராவிடர் கழகம் எதிர்க்கிறது, ஆனால், அந்த எதிர்ப்பு முறையும், வழியும், 'தினசரி' கொண்டுள்ளதுபோல, நுனிமரம்ஏறி அடிமரம் வெட்டுவதாகவோ, ஆற்றைக்கடக்க முதலையைப் பிடித்துக்கொண்டது போலவோ இராது. திராவிடத்தனி அரசு என்பதன்றி, வடநாட்டிலேவளர்ந்துள்ள ஏகாதிபத்யப்பிடியிலிருந்துவிடுதலை பெற வேறுமார்க்கம்கிடையாது ஆனால்தினசரியின்பிரத்யேக அகராதியில்தான் "திராவிடர்" என்றவார்த்தையே கிடையாதே, எங்கிருந்து நமது போர்முறை அதற்கு விளங்கப்போகிறது. தினசரி, தனக்குத் தெரிந்த ஏதோஓர் எதிர்ப்பு முறையைக் கொண்டுவேலைசெய்ய உத்தேசித்திருக்கக் கூடும். பார்ப்போம், அதனையும்! எவ்வளவோ தமாஷாக்களிலே அதுவுமொன்று!!

ஆனால், "மற்றோர் சூழ்ச்சி" என்று தலைப்புக் கொடுத்ததைவிட, "மற்றோர் குட்டு" என்று கொடுத்திருந்தால், பொருத்தம் இன்னும் கொஞ்சம் நன்றாக இருந்திருக்கும். இதைமட்டும் கவனிக்கவாபோகிறார், தினசரியார்!

## பாரதிதாசன் நிதி

நாமக்கல் தோழர் கிருஷ்ணராஜ் அவர்களால் கவிஞர் நிதிக்காக வசூல் செய்யப்பட்ட ரூபா 1718—14—5ம்; புதுக்கோட்டைத் திவான் ஜனுப் கலிபுல்லா அவர்கள் அளித்த நன்கொடை ரூபா 50—0—0ம் என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

**அண்ணாத்துரை,**
பொருளாளர்.

# திறந்த மடல்

★

தோழர் சி. மு. நாராயணன்செட்டியார்,
தலைவர், காரைக்குடி நகரசபை.

**முற்போக்காளரே!**

மார்ச்சு 29-ந்தேதி நடைபெற்ற காரைக்குடி நகரசபையின் கூட்டம் நம் நாட்டுச் சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதாகும். காரைக்குடியிலுள்ள, சாப்பாடு சிற்றுண்டிக் கடைகளில் இனி, ஜாதி வித்தியாசம் காட்டும் கடைகளுக்கு அனுமதி கொடுக்கக்கூடாதெனத்தாங்களும், மற்ற எல்லா உறுப்பினர்களும் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறீர்கள். அரசியல்விவகாரங்களில், காரைக்குடிநகரசபைஉறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமைகளிருக்கக்கூடும். ஆனால் அரசியல் விடுதலைக்கு முட்டுக்கட்டையாகஉள்ள ஜாதி வித்தியாசம்—வகுப்பு வேற்றுமை ஆகியவைகளைத் தீர்ப்பதில் உறுப்பினர் அனைவரும் தங்களின் உணர்ச்சியைக் காட்டித் தீர்மானத்தை எதிர்ப்பின்றி நிறைவேற்றியிருப்பதானது, மற்ற நகரசபையினருக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறது. அரசியல் விடுதலையை உள்ளபடியே விரும்பும் எவரும் காரைக்குடி நகரசபையினருக்கு நன்றியும், வணக்கமும் செலுத்தியே தீருவர். அதுமட்டுமல்ல, இவ்வித தீர்மானங்கள் மூலம் நம் நாட்டினரிடையேஉள்ள வகுப்புச்செருக்குகள்—வேற்றுமைகள் எவ்வளவு விரைவில் தீர்க்கப்படுகின்றனவோ, அதற்கேற்ப வெள்ளையர் ஆட்சியும் விரைவில் முடிவுறும். சம்பந்தமில்லாத வெறும் அரசியல் வெத்துவேட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றிவரும் நகர சபைகளுக்கு, காரைக்குடி நகரசபை சரியான பாடம் கற்பித்துள்ளது. இவ்வித பெரும் புரட்சிகரமான மாறுதலைச்செய்த காரைக்குடி நகர சபையினருக்கு திராவிடர் அனைவரும் நன்றி செலுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

**கூத்தரசன்**

●

சர். ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ்,
(வழி நிலை) புது டெல்லி.

**தூதரே!**

தங்களின் தூதுகோஷ்டி நாடகத்தை புது டெல்லியில் ஆரம்பித்துவிட்டீர்கள். நாடகம்என்னமோ பழையநாடகந்தான். தங்களின் பல்லவி மட்டும் புதிதாயிருக்கிறது. மற்றபடி தூதுகோஷ்டி நாடகத்தில் புதுமை ஒன்றுங் காணோம்.

தங்களின் புதிய மைனாரிடிபல்லவிக்கு ஜனுப் ஜின்னா, டாக்டர் அம்பேத்கார்உள்படப் பலதலைவர்கள் சரியான சாட்டை கொடுத்தும், மீண்டும் அப்பல்லவியையே பாடி வருகின்றீர்கள். இதனால் தாங்கள் கூறும் மைனாரிடி பல்லவியின் உட் கருத்து வேறு என்பது வெளிப்படையாக ஆகிவிட்டது.

தவிர, தங்களின் திருக்கூட்டத்தார் இந்நாட்டுக்கு உள்ளபடியே விடுதலை அளிப்பதாயின் இவ்வித தகிடுதத்த நாடகங்கள் தான் நடத்தப்படவேண்டுமா? பிரிட்டிஷ் ஆட்சியினருக்கு இந்நாட்டின் விடுதலைக்கான முறைகளும், தேவைகளும் என்ன என்பது தெரியாதா? இத்தனை ஆண்டுகளாக வெள்ளையர்களுக்கு இந்நாட்டின் விடுதலைக்கான உண்மைத் தேவைகள் தெரியாது போன்று தூது கோஷ்டி நாடகம்நடிப்பதேன்? எத்தனை காலத்திற்கு இந்த நாடகங்கள் செல்லுபடியாகமுடியும்? எனவே தூதுகோஷ்டி

(அடுத்த பக்கம் பார்க்க)


WANTED

Applications are invited from qualified candidates for the post of Manual Training Instructor (Rattan Work) in the Board High School at Ponneri in Rs. 30–2B–50. grade Applications furnishing age, qualifications (General and Technical,) community and previous experience should reach this Office on or before 1—5—1946.

Chingleput Dt. Board's Office, Saidapet, Dated 8-4-1946.

T. Shunmugam,
President.

# உங்கள் பிரதிநிதி

★

சென்னை சர்வ கலாசாலைத் தொகுதி வாக்காளர்களே! பெருவாரியான ஓட்டுகளை அளித்து ஸ்ரீஜத். கே. பாஷியம்ஐயங்கார் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். நீங்கள், மற்றத் தொகுதி வாக்காளர்கள் போல, எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மட்டுமல்லவே, பட்டதாரிகளல்லவா! பல்கலை பயின்றவர்களாயிற்றே! தக்கவர்என்று தெரியாமலா அவரைத்தேர்ந்தெடுத்திருப்பீர்கள்? அவரை எதிர்த்த இருவரை, 'டிபாசிட்' இழக்கும் படிகூடச் செய்திருக்கிறீர்கள்! பெருமைக்குரிய வெற்றி பெற்றார், ஸ்ரீஜத் பாஷ்யம். அவருடைய அரும்பெரும் குணாதிசயங்களை அறியாமலா, நீங்கள் "ஓட்டுகளை"த் தந்திருப்பீர்கள்? செச்சே! மற்றத் தொகுதிகளிலகூடிய "மகாத்மா" என்ற சொல்லிலே உள்ள "மாந்திரீக" சக்திமட்டும் போதும் என்று கூறலாம். பல்கலை பயின்ற நீவிர் ஒருவரைத்தேர்ந்தெடுப்பதென்றால், சுலோகத்துக்குக் கட்டுப்பட்டா செய்திருப்பீர்கள்? பல்கலை பயின்றவர்களுக்கும், வெறும் கை எழுத்துப் போடுமளவு படித்தவர்களுக்கும் வித்யாசம் இராதா என்ன!

தெரிந்துதான், அவருக்கு முடிசூட்டி இருப்பீர்கள்.

## தேசபக்தி

உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் தேசபக்தி, கடல்கடந்து போகச்செய்தது அவரை. இந்தியாவிலே உள்ளவர்கள் விசேஷமாகக் காட்டிய அக்கரைகூடச்சாதாரண விஷயம், கடல்கடந்துசென்றுள்ள இந்தியர்களைக் காப்பாற்ற அவர் சென்றாரே, அது பெரிய காரியமல்லவா, அவருடைய தேசபக்திக்கு அது சிறந்ததோர் எடுசதுக்காட்டல்லவோ! இந்திய தேசிய ராணுவத்தினர் மீது வழக்கு தொடரப்பட்டதுபோல, மலாயாவில் உள்ள இந்தியர்களில் சிலர்மீது, வழக்குத் தொடரப்பட்டது. உடனே, உங்கள் பிரதிநிதியாக இப்போது உலவும் ஸ்ரீ. பாஷ்யம் ஐயங்கார், (பஞ்ச)கச்சையை வரிந்துகட்டிக் கொண்டு, கடலைத்தாண்டினார், அவர்களைக் காப்பாற்ற. தேசபக்திக்கு, இது அல்லவா சான்று!

## திறமை

வாதிடும் திறமைபெற்ற அவர், அதனை இந்தத்திருப்பணிக்கு அர்ப்பணிக்க முன்வந்தது போற்றத்தக்கதுதானே. வழக்கிலே சிக்கிக்கொண்டவர்கள் சார்பிலே ஆஜராக, அவர் மலாயா சென்றார். இந்திய சர்க்கார் அதற்காக அவரை அனுப்பினர், அவரும் தமது திறமையை, தேசபக்திக்காகச் செலவிடச் சென்றார். அவருடைய திறமையின் விளைவு என்ன? ஒரு எடுத்துக்காட்டு.

ஜப்பானிய ராணுவப் போலீசில் வேலைசெய்ததாகவும் ராம்சிங் என்பவரைத்துன்புறுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட பி. எம். நம்பியார் என்பவர் சார்பிலே, ஸ்ரீ பாஷ்யம் ஆஜராகி வாதாடினார், தீர்ப்பு என்ன? விடுதலையா? ஐந்து வருஷக் கடுங்காவல் தண்டனை நம்பியாருக்கு.

இதைக்கூறுவதால், அவருடைய திறமை முழுவதையும் நாம் குறை கூறிவிடுகிறோம் என்று அர்த்தமில்லை நண்பர்களே! ஆனால், நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் பிரதிநிதி தேசபக்தியின் மேலீட்டால் தேக நலனைப்பற்றிக்கூடக் கவனியாமல், தூரதேசம்சென்றுதிறமையாக வாதாடினது உருவான பலனைத் தரக்காணோம், திறமையான தேசபக்த வக்கீலைப் பெற்றும், நம்பியாருக்கு 5-வருஷக் கடுங்காவல்கிடைத்தது.

பலன் இல்லாத காரியம் செய்தார் என்பது கிடக்கட்டும். மலாய்க்கு அவர் சென்றது, இந்த ஒரு வழக்குக்காகமட்டுமல்ல, இன்னும் பல வழக்குகள் உள்ளன. பம்பாய் வக்கீல் நரிமன் இன்றும் அங்கேதான் இருக்கிறார், வழக்குகளைநடத்திக்கொண்டு. நம்பியார் போல மேலும் பலர் கோர்ட்டிலே நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்கும் தேசிய காரியத்துக்காகத்தான் ஸ்ரீ பாஷ்யம் சென்றார்; காரியம் அரைகுறையாக இருக்கிறது, இவர்மட்டும வந்துவிட்டார். ஏன்?

மலாயாவிலே சிக்கிக்கொண்டுள்ள அந்தத் தோழர்களைக் காப்பாற்றுவதைவிட, அவசரமான, முக்கியமான தேசிய அலுவல்ஏதாவது இங்கே ஏற்பட்டுவிட்டதா? அப்படியே, அவசர அலுவல்என்றாலும், இங்கே அதனைக் கவனித்துக் கொள்ளத்தலைவர்கள், திறமைசாலிகள் இல்லையா? மலாயாவிலே, உள்ள தோழர்களுக்குத்தானே, இப்படிப்பட்ட உதவியாளர்கள் அதிகம் இல்லை. இங்கிருந்து மலாயாவுக்குச் சென்ற, உங்கள் பிரதிநிதி போன காரியத்தைப் பூர்த்தி செய்யாமல், பாதியிலே விட்டுவிட்டு, அவசர அவசரமாக இங்கே வரவேண்டிய அவசியம் என்ன? மாகாண சட்டசபையிலே, ஏதேனும் மகத்தான மசோதாவிவாதிக்கப்பட்டு வருகிறதா, இவருடைய விவேக உரை தேவைப்படுகிறது; ஆகவேதான் வந்திருக்கிறார் என்று கூற. இன்னும் சட்டசபையேகூடவில்லை. வேலை அங்கே அவசரம், முக்கியம்; கஷ்டத்திலே சிக்கியவர்கள் அங்கே; தூக்கு, ஜென்ம தண்டனை, பத்து, ஐந்து வருஷக் காவல் என்றபடி பலவிதமான நிலைமைகளிலே அவர்கள் சிக்கிக்கொள்ளக்கூடும். அவர்களைக் காப்பாற்றுவதைவிட முக்கியமான காரியம் இங்கே என்ன இருக்கிறது? ஏன், அந்த வேலையை அவ்வளவு அலட்சியமாகக் கருதிவிட்டு, இங்கே வந்துவிட்டார்? இவரை நம்பினவர்களின் கதி என்ன அங்கே? நட்டாற்றில்விட்ட கதைபோல, வழக்குகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்போது, இவர்வந்துவிட்ட காரணம் என்ன? தேசபக்திக்கு இது அழகா? வக்கீல்என்றநிலைக்கு உள்ளபொறுப்புணர்ச்சி இதுதானா? உங்கள் பிரதிநிதி இவர்! சரிதானா?

## தியாகம்

போகட்டும், தானம் கொடுத்த பசுவைப் பல்லைப்பிடித்துப் பார்த்தானாம் என்ற கதைபோல, என்னமோ அவ்வளவு பெரிய தேசபக்தர், மலாயாவரை சென்று, நமது நாட்டு மக்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கிலே ஆஜராகித்தம்மால் கூடுமான வேலை செய்தாரே, அதுபோதாதா? அதற்குப்பாராட்டக்கூடாதா? பாதியிலே வந்துவிட்டார் என்பதற்காகக் கண்டிப்பதா, என்று பல்கலை பயின்றவர்கள் கேட்பர்.

"ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் தமது தேசபக்தியையும் வாதிடும் திறமையையும் உலகுக்கு எடுத்துக்காட்ட ஒருசந்தர்ப்பம்கிடைத்தது. எனக்கு கிடைக்கவில்லையே" என்று கூறி ஏங்கும் வக்கீல்கள் பலர் உளர், என்று நாம் கூறினால், "யாரும் இருக்கமுடியாது. போகச்சொல்லி இருந்தால் யார்போயிருப்பார்கள்? கேஸ்நடத்திப்பணம் சம்பாதிக்கும் சுயகாரியத்தைப் பெரிது என்று எண்ணிக்கொண்டுஇருப்பார்களே தவிர, தேசபக்தர் ஸ்ரீ பாஷ்யம் போல, யார் மலாயா போயிருப்பார்கள்" என்று நீங்கள் கேட்பீர்கள்.

நண்பர்களே! ஸ்ரீ பாஷ்யத்தின் "தேசபக்தி" மட்டுமல்ல, அவரை மலாய்க்கு அழைத்துச் சென்றது. போகவரக்கப்பல் செலவுசர்க்காருடையது! அதுமட்டுமல்ல; பல்கலை பயின்றவர்களே! மாதம் 12000, ரூபாய் அவருக்கு வக்கீல்பீஸ் தரப்பட்டது. தேசபக்தியைக் காட்ட அவர்எடுத்துக்கொண்டசிரமமான காரியம் அவருக்கு, தேசபக்தர், வீரர், தியாகி, என்றபெயரைமட்டுமல்ல, உலகப் பத்திரிகைகளிலெல்லாம் ஓர் உயர்தரமான வக்கீல் என்ற கீர்த்தியையும் வாங்கித்தந்ததுடன், சுமார் 20000 ரூபாயையும் அவருக்குத் தந்திருக்கிறது. தேசபக்தி, 20000 ரூபாயும் தரும் என்றால், ஸ்ரீபாஷ்யம்மட்டுமா? கப்பல் நிறைய வக்கீல்கூட்டமாகிவிடுமே! யாரும் முன்வந்திருப்பார்களே! ஆக உங்கள் பிரதிநிதிமலாயில்வழக்கில் சிக்கிக்கொண்டவர்களைக் காப்பாற்றும் கைங்கரியத்தில் ஈடுபட்டார், அவருடைய திறமையான உதவி பெற்றும் ஒருவர் 5 வருஷத் தண்டனை பெற்றார், அவர்எடுத்துக் கொண்ட கைங்கரியம் பூர்த்தியாகாமுன்பே, "தாய்நாடு"வந்துவிட்டார், மற்ற வழக்குகளை யாரோ பார்த்துக்கொள்ளட்டும், எப்படியோ ஆகட்டும் என்று எண்ணிக் கொண்டு. இந்த அரைகுறை கைங்கரியத்துக்கும் அரசாங்கத்திடமிருந்து, 20000 ரூபாய்வரை, 'பீஸ்' பெற்றிருக்கிறார். இவர் போயிருந்த மலாயாவில், மக்களில் பெரும்பாலோர், முழு ஆடையின்றி உள்ளனர் என்பதற்காக, இங்கிருந்து பழைய துணிகளைச் சேகரித்து அனுப்புகிறார்கள். அந்த மனமுருக்கும் நிலையில் உள்ள மலாய் போய் வந்தவர், 20000க்கு 'பீஸ்'பெற்றார்.

இது தேசபக்தி! இவர் நீங்கள் பெருவாரியான ஓட்டுகள் கொடுத்துத்தேர்ந்தெடுத்த பிரதிநிதி!! இந்தத்தகவலை நமக்குத் தெரிவித்தது, தோழர் காசா சுப்பராவ் வெளியிடும் 'சுவதந்திரா' எனும் ஆங்கில வாரப்பத்திரிகை.

இதனால், நீங்கள்செய்யவேண்டுமென்று நான் கூறுவதோ எதிர்ப்பார்ப்பதோ, என்ன? கொடுத்த ஓட்டுகளையோ திருப்பி வாங்கிவிட முடியாது! தேர்ந்தெடுத்த பிரதிநிதியைத்தள்ளிவிடவோ முடியாது, இங்கே திருப்பி அழைத்துவிடுவது என்னும் (Recall) ரீகால் முறை கிடையாது.

ஆனால் ஒன்று செய்யலாம். தேசபக்தி இவ்வளவு இலாபகரமாக இருக்கிறது சிலருக்கு என்ற உண்மையைத்தெரிந்துக் கொள்ளலாம். நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதி, மலாயா சென்று வந்ததுதேசபக்தியினால் மட்டுமல்ல, காசுசக்தியும் சேர்ந்திருக்கிறதே என்பதைத் தெரிந்து, கொஞ்சம் வருத்தமும் வெட்கமும் அடையலாம்.

முடியுமானால், "ஓ! எமது பிரதிநிதியே! உமக்கோ செல்வம் இருக்கிறது; சம்பாதிக்கும் திறமையும் இருக்கிறது. சர்க்கார் பணம் தருவதாகச் சொன்னாலுங்கூட, வேண்டாம், பணத்துக்காக அல்ல, தேசபக்திக்காகவே நான் மலாய்போகிறேன் என்றுகூறி, அந்த 20000 ரூபாய் பெற்றுக்கொள்ளமாட்டேன் என்று கூறியிருக்க வேண்டும், அப்போதுதான் உமக்கும் பெருமை, உம்மைத்தேர்ந்தெடுத்த நாங்களும் பெருமை அடைந்திருப்போம். என்னமோ நடந்தது நடந்துவிட்டது. இந்த 20000 ரூபாயை யாவது மலாயாவில் கஷ்டப்படுபவர்களுக்கு அனுப்பிவிடுங்கள்," என்று சொல்லவேண்டும், உங்கள் பிரதிநிதியிடம்.

சொல்வீர்களா? பார்ப்பீர்களா?

அவருக்கு உங்களைப்பார்க்கநேரமிருக்கிறதோ இல்லையோ யார் கண்டார்கள்!

---

## திறந்த மடல்

B பக்கத் தொடர்ச்சி

யினராகிய உங்கள்கூட்டத்தினர் உடனே ஆட்சியை இந்நாட்டு மக்களிடத்துமாற்றிவிடுங்கள். இந்நாட்டிலுள்ள பல்வேறு இனங்கள் சமுதாயங்கள் தங்கள் தங்கள் நாட்டின் விடுதலையையும், இன எழுச்சியையும் பலப்படுத்த முட்டுக்கட்டை போன்று வெள்ளையர் ஆட்சி இனி இங்கிருக்கவேண்டிய அவசியமில்லை. எவ்வளவு விரைவில் உங்கள் கடையைக் கட்ட முடியுமோ அதற்கேற்ப அந்தந்த இன மக்கள் தங்கள் நாட்டின் விடுதலைப்புரட்சியை விரைவில் நடத்த முடியும்என்பதை அறியவேண்டுகிறேன்.

**கூத்தரசன்**

●

மதன் மோகன் மாளவியா,

காசி.

## கிழப் பண்டிதரே!

டெல்லி சட்டசபையில், டாக்டர் தேஷ்முக் அவர்கள் கொண்டுவந்த, மாதர் விவாக உரிமை மசோதா நிறைவேற்றப்பட்டதைக்கண்டு, தாங்கள் காசியிலிருந்து குய்யோ முறையோ என்று சனாதனக் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டிருக்கிறீர்கள். தங்களின் அழுக்கு பிடித்த சனாதன தர்மத்தின் மகிமையைத் தாங்கள் அன்றொரு நாள் ஆங்கிலேய நாடு சென்றபோது தீட்டுப்படாமலிருக்கக்களிமண் கொண்டுபோன படலம்மூலமாக காட்டிவிட்டீர்கள். தங்களின் அறிக்கையைக் கண்டு இன்றைய உலகம் பரிதாபப் படுவதைத் தவிர வேறு என்ன செய்வது? என்னதான் இருந்தாலும் இவ்வித முரட்டுச்சனாதன வெறி தங்களுக்கிருப்பது மிகவும் வெட்கக்கேடு, பெரிய தேசியத் தலைவர் என்று போற்றப்பட்டுவந்த தங்களுக்கே அதுவும் கிழட்டு வயதில் இவ்வித சனாதன வெறியிருந்தால் மற்ற மடி சஞ்சிகள் பற்றியும் கேட்கவேண்டுமா? உங்களைப்போன்றார்களை விடச்சங்கிராச்சாரிகளும், மடத்துத் தம்பிரான்களும் ஒருவகையில்மேம்பட்டவர்கள் என்றே கூறலாம். பாபம் அவர்கள் மதக்குட்டையிலேயேபுரளுபவர்கள், நீங்களோ அகில உலக விவகாரங்களில் ஆற்றல்பெற்றவர்கள். இவ்வளவிருந்தும் தங்களது புத்தி மதவெறி வக்ரமாக மாறுவதென்றால் அதை எதற்கு ஒப்பிடுவது! பார்லிமெண்ட் தூதுகோஷ்டிவந்துள்ளபோது காந்தியார் ராம பஜனை செய்து நம் நாட்டின் பெருமையைக் காட்டினார். மந்திரி தூதுகோஷ்டி வந்துள்ள இன்று சனாதன வெறியின்மூலம் இந்நாட்டின் பெருமையை மேலும் நிலைநாட்டுங்கள், தங்களின் மீசை நரைத்திருந்தும் சனாதன ஆசைமட்டும் நரைக்காதது இந்நாட்டின் விடுதலைக்கு ஓர் திருஷ்டிபரிகாரமே யாகும்.

**கூத்தரசன்**

## சென்னை ஜில்லா திராவிடர் கழகம் நிர்வாகக் கமிட்டி

21—4—56 ஞாயிறு காலை 9-மணிக்கு, பார்க் டவுன் பொம்மு செட்டித் தெரு 11-வது இல்லத்தில் நடைபெறும். அது சமயம் நிர்வாக உறுப்பினர்களும், ஒவ்வொரு வட்டகிளைச்சங்கத் தலைவர்-செயலாளர்களும், தவறாது வர கேட்டுக் கொள்ளப்படுகிறது. பல முக்கிய விஷயங்கள் விவாதிக்கப்படும்.

N. V. N., பொதுக் காரியதரிசி.



உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-செ. நூலில் தயார் செய்யப் பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமி கோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


## தாமரை பூத்த குளம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

த்தால், அர்நிலையிலே தன்னைவேறு யாரேனுமோ, மங்கைமாரோ கண்டு விட்டால், கேவலமாகக் கருதுவார்களே என்று அஞ்சி, சுற்றுச்சார்புக்குப் பயந்து கண்களைமூடினனா? இல்லை! மற்றவர்கள்என்னஎண்ணுவார்களோ என்று பயந்தல்ல அவன் கண்களைமூடிக்கொண்டது. அவனுடையமனமே அதற்குஇடந்தரவில்லை. இதுவல்லவா பண்பு! நளன், கலைவல்லோன், நற்பண்புகட்கு உறைவிடம், நாடாளும் மன்னன், எனவே அவன் நிர்வாண நங்கையரைக் கண்டான் களித்தான், மேலும் சிலநேரம் கண்டான் என்று கூறலாகாது என்ற வரம்புக்குக் கவி அதிவீரராமர்கட்டுப்பட்டார்.

"மலர்பயில் வாவிதோய் மாதர் வண்டுகிலலை புன்னனைதலு மல்குற்றோன்றலாற் கலைவலான் கண்முகிழ்த்தேகக் காண்குறுள் முலைமுகடழுந்துறவோருத்திமுட்டினாள்" இது செய்யுள். பொருள் விளக்கத்துக்காக இதோ அதனை பிரித்துக்காட்டுகிறேன்.

மலர்பயில் வாவிதோய் மாதர் நுண்துகில் அலைபுனல் நனைதலும் அல்குல் தோன்றலால் கலைவலான் கண்முகிழ்த்து ஏக காண்குறுள்முலை முகடு அழுந்துற ஒருத்தி முட்டினாள். கருத்தைக் கவனியுங்கள். நீர்நிலையிலே நிர்வாணக் கோலத்திலே நங்கையர் இருக்கக்கண்ட நிடத தேசாதிபதி, கண்களை மூடிக்கொண்டு நடக்கலானான், அந்த நேரத்திலே நீராடி வெளிவந்த நீலவிழியாள், நளன் தெரியாததால், அவன் மீது மோதிக்கொள்கிறாள், மேலிடம் நளனுடைய மார்பிலே அழுந்தும்படி! இதுபொருள். செய்யுளை இங்ஙனம் அதிவீரர் இயற்றினதன் உட்பொருளைக்காணுங்கள். யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்பதுகூடத் தெரியவில்லை நளனுக்கு, அவ்வளவு இறுகமூடிக்கொண்டான் கண்களை. அதுமட்டுமல்ல. தடாகத்தருகே கண்களை மூடியவன், இரண்டடி எடுத்துவைத்தஉடனே திறந்துவிடவுமில்லை. இங்கே இதுபோன்றகாட்சிகள் பல இருக்கக்கூடும், என்று ஐயுற்றுக்கண்களைமூடிக்கொண்டே நடக்கலானான். அவ்வளவு பண்புவிளக்கம் செய்கிறார் கவி. அதுமட்டுமல்ல, நளன் மீது மோதிக்கொண்ட மாதைப்பற்றிக் கவி, அமைத்திருக்கிற பதத்தைக் கவனியுங்கள், முட்டினாள், முட்டுவதுஎது? மிருகத்தனமான செயல் இது, என்பதைக்கவி, நாம் உணரவேண்டுமென்பதற்காக முட்டினாள்என்று கடுமையான பதத்தைப் புகுத்திக் கவிதையை முடிக்கிறார். இதேநிலையிலே கம்பரை ஏவிப்பாருங்கள், பத்துப்பாடலாவது பாடாவிட்டால், அவருடையமனம் அமைதி அடையாது என்று நிச்சயமாகக் கூறலாம்!

என்சொல்லிலே உங்கட்கு அவ்வளவு நம்பிக்கை ஏற்படாமல் போகக் கூடும். எனக்குத் தடையில்லை, தோழர்களே, அதேவிதமான நிலைமையில் கம்பர், எப்படிப்பாடியிருக்கிறார் என்பதைக் காட்ட, அடிக்கடி, நீராடும் துறைக்குச் சென்று நிர்வாண நளினிகளைக் காண்பது கூடாதே என்று 'பண்பு' கூறுகிறது, பாவாணர்கள் நம்மீது பூட்டும் பாணங்களோ, இவர்தம் குட்டுகளை வெளியாக்கவேண்டுமே என்றதுடிப்பைத்தருகிறது. ஆகவே உங்களுக்கு மீண்டுமோர் முறை அழைப்பு, தடாகத்துக்கு; தத்தை மொழிச்சியர் நீராடும் இடத்துக்கு. இது அயோத்திமாதர்கள் நீராடிய இடம். மிதிலையிலே, வில்முறிந்தது, ஜனகனின்சொல்வென்றது, இராமருக்குச் சீதையைத் திருமணம் செய்துதரத்தீர்மானித்தமிதிலை மன்னன் அயோத்தி அரசனுக்கு இந்த நற்செய்தியைக்கூறி அனுப்பத் தசரதன் களிப்புடன் மிதிலைக்குப் புறப்பட்டான், பட்டத்தரசிகள் புடைசூழ, அவர்தம் பாங்கியர் உடன்வர, மற்றும் மந்திரிப்பிரதானியரும் ஏவலர் காவல்புரிவோரும் படைவீரரும் உடன் நிரக. மிதிலை செல்லும் வழியிலே, ஒருசோலை. அங்கு தங்கினர் இளைப்பாற. அங்கோர் பொய்கை, அதிலே புனல் விளையாடப் புகுந்தனர் பூம்பாவைகள். சிந்தனையைச் செலுத்திப் பார்க்கவேண்டும் கம்பதாசர்களே! நளன் கண்ட நீராடுமாதர், புனலாடுகையில், காமவேட்கை உடையவர்களாகவோ, சேட்டைசெய்ததாகவோ கவிகூறவில்லை. தற்செயலாக அதைப்பார்க்க நேரிட்ட நளனும், நின்ற இடமே தங்கிப்பார்த்துப் பூரித்தான், காமுற்றான்என்றோ சொன்னாரில்லை. அயோத்தி ஆடவரும் மகளிரும், கம்பசித்திரத்திலே காணப்படும் விதத்தைப் பாருங்கள். மகளிர் நீராடினர் என்று அதிவீரராமபாண்டியன் கூறினார். கம்பருக்கோ இந்தஅளவு திருப்திதருவதாக இல்லை, ஆகவே அவர் ஆடவர் கண்டனர் களித்தனர், சிலர் கூடநின்று புனலாடினர் என்று பாடியிருக்கிறார். விளக்குஇருக்குமிடத்திலேஒளி இருக்கவேண்டும்; ஆடவர் இருக்குமிடத்திலே அணங்குகள் இருக்கவேண்டியது, அதுபோலவே அவசியம் என்பதுபோலும் கம்பர் கருத்து.

"குடைந்து நீராடு மாதர் குழாம் புடைசூழ வாழித்தடம்புயம்போலிய வாண்டோர் தார் கெழுவேந்தனின்றான்" என்று மகிழ்ந்து கூறுகிறார் கம்பர், பாலகாண்டம், புனல் விளையாட்டுப்படலம் 12வதுசெய்யுளிலே.

"குடைந்து நீராடும் மாதர்

குழாம் = நீரிலே மூழ்கி விளையாடும் மாதர் கூட்டம்

புடைசூழ = தன்னைச் சுற்றிலும் நிற்க

ஆழிதடம்புயம் போலிய = வட்ட வடிவமான தோள்வளை அணிந்த பெரிய புஜங்கள் அழகு பெறுமாறு,

தார்கெழு = மாலை யணிந்த

ஓர் வேந்தன் = ஒரு மன்னன்

நின்றான் = நின்றிருந்தான்

தசரதனுடன்வந்த ஓருமன்னன், கலியாண வீட்டுக்குப்போகுமுன், சோலையிலே மாலையிலே மையல் கொண்டதாலே, மாதர் பலர் நீரில் நிற்கத் தானும் நின்றானாம். நால்வகைப் படை சுற்றி நிற்க மன்னர்கள் நிற்பதாகக் கவி கூறினால், அக்கவிதையைப் படிப்போர் மகிழ்ச்சி பெறக் கூடும். எதிரிகள் சுற்றிநின்றனர், இவன் நடுவே நின்றான் என்று கவி பாடினால், படித்திடும் கோழையும் வீரனாவான். மந்திரி பிரதானியர் புடைசூழ மன்னவன் இருந்தான் என்று கவி பாடினால் கேடொன்றுமில்லை, ஆட்சி ஒழுங்காக இருந்தது என்றேனும்அறியலாம். கம்பன் காட்டும் மன்னன், நீராடும் மங்கையர் புடைசூழ நிற்கிறான்! என்ன நேர்த்தி! இதுவா கீர்த்திக்கு ஆதாரம்?

கற்புடை மாதரின் மனப்பாங்கு எவ்வளவு தூரம் உச்சநிலையில் இருக்க முடியும் என்பதை எடுத்துக் காட்ட, வேதநாயகம் ஓரிடத்தில் ஒரு கற்பனைத் தம்பதிகளின்காதையைக் கவிதை உருவிலே காட்டுகிறார்.

ஓவியக்காரனொருவன் அழகிய சித்திரம் தீட்டினான், அதை வந்து பார்க்கும்படி தன் இல்லக் கிழத்தியை அழைக்கிறான் கணவன். உரையாடல் நடக்கிறது.

"அது என்ன சித்திரம்?"

"அற்புதமானது, வந்துபாரேன்"

"ஆணா, பெண்ணா?"

"ஏன்? ஆடவனின் ஓவியந்தான், வா, பார்க்கலாம்"

"ஆண் சித்திரமேல் நான் பாரேன்"

"பைத்யமே! ஆண் சித்திரமல்லடி, ஆண் சித்திரமல்ல, அழகான பெண்ணின் ஓவியம். வா, போய்ப் பார்ப்போம்"

"உஹூம். வரமுடியாது, நீரும் போகக்கூடாது. பாவையர் தம் உருவமெனில் நீர் பார்க்க மனம் பொறேன்"

ஆடவனாயின் நான் காணேன்; பெண்ணெனில் நீ போய்ப் பாராதே, நீஎனக்கு, நான்உனக்கு. இப்படி இருக்கிறது வேதநாயகத்தின், குடும்பப் பண்பு தீட்டும் முறை.

"ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்
தைக் கண்ணுறுவான்
தேவியை யாம் அழைத்திட ஆண்
சித்திரமேல் நான் பாரேன்
பாவையர் தம் உருவமெனில் நீர்
பார்க்க மனம் பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்புவேற்
பின் வற்புளதால்"

அறிஞர் வேதநாயகம் தமது கவிதைமூலம் நாட்டவருக்கு அறிமுகப் படுத்திவைக்கும் "தேவி"யுடன், ஆடவருடன்சேர்ந்து தடாகத்திலே நின்று கொண்டிருந்தனராமே அயோத்திநகரத்"தேவிகள்" அவர்களை ஒப்பிட்டுப் பாருங்கள்! கம்பனின்"பண்பும்" அதன்மூலம் உங்கட்கு விளங்கும்.

மாதரும் ஆடவரும் ஒரேதடாகத்தில் நின்றுகுளித்திடும் "ரசலீலை" "இராமப்பிரபாவத்தை" விளக்கிடத் தேவையா என்பதே நம் கேள்வி. அயோத்திவாழ் ஆடவரும்மாதரும் இப்படிக் காமசித்தர்களாக இருந்தனர் என்று கூறுவது, "தெய்வமாக்காதை"யைக்கூறவந்த கம்பரின் நோக்கத்துக்குஊறுதேடுவதாகாதா என்று கேட்கிறோம். கோபித்து என்னபயன்!

காதலரின் குறும்பானவிளையாட்டைக்கூட, ஒரு கட்டுப் பாட்டுக்குள் நிறுத்துகிறார் நைடதநூலாசிரியர். நளனும்தமயந்தியும் திருமணம் முடிந்தபிறகு, வாழ்விலேஒவ்வோர் நாளும் திருநாள்என்றகூறக்கூடிய விதத்திலே ஆனந்தமாக வாழ்ந்து வரும்போது, புனலிடை மூழ்கி, பொழிலிடை உலவி, கனிமொழி பேசி, இல்லறம் நடாத்திவந்தகாதையைக்கூறுகிறார் அதிவீரராமபாண்டியன். எப்படி? புனலிலேவிளையாடச் செய்கிறார் நளனையும் தமயந்தியையும்! ஆனால், அங்கேகூட, மாதரின் பண்புக்கு மாசுநேரிடாதபடி பாதுகாக்கிறார், தமதுபாடல்வேகத்துக்குக் கண்ணியம் எனும் கடிவாளம்பூட்டி.

கம்பர்காட்டும் தடாகம்வேறு, நிடதகாட்டுந்தடாகம்வேறு; முன்னதிலே, பலமாதர் ஒரு ஆடவர், ஆடவர்களிக்கிறார் ஆரணங்குகள் கவலையற்றுள்ளனர்; நிடதகாட்டுப் புனல்விளையாட்டு அத்தகையகாம வேள்சாலையல்ல; இங்கு நளனும் தமயந்தியும் புனலாடுகிறார்கள் தனியாக. அதுபோது, ஆடைநீர்பட்டு நனைந்துவிடுகிறது, நளன் காண்கிறான். தமயந்தியின் நிலை என்ன? வெட்கினாள். வெட்கம் மட்டும் போதுமா? "வேண்டாம் கண்ணாளா! இதுஎன்ன விளையாட்டு" என்றுகொஞ்சுமொழிபேசி, அவன் பார்வையை வேறுபுறம் திருப்பும்படி கெஞ்சினாளா? இல்லை! வேறு என்ன செய்தாள்? தகாதசெயல் புரியும் தன்மணாளனை மாதருக்கே இயல்பான சாகசத்தால் தடுத்துவிட்டாள். நீராடச்சென்ற இடத்தில் சுகந்தத்தூள் இருந்ததல்லவா, மெய்மணக்கத் தேய்த்திட. அந்தப் பொடிகலந்த நீரைவாரினள், நளனுடைய முகத்திலே இறைத்தாள்! கண்ணிலே பொடி வீழ்ந்தபோது காவலனின் நோக்கம், காரிகையின் மீது பாயமுடியாதல்லவா! ஒரே விநாடியில், வெட்கம், திகைப்பு, யோசனை, யுக்தி, வேலைத்திட்டம், வெற்றி இவ்வளவும் தமயந்திக்கு ஏற்படுகிறது. ஒருகைநீர்தான் இவ்வளவுக்கும். ஆனால் அந்தநீரைவாரி இறைக்கச்செய்ததன் மூலம், அதிவீரராமபாண்டியன் மாதர் குல முழுதுக்குமன்றோ பெருமைதேடி விட்டார்!

அந்துகினனைதலினலல்குறேன்றுதல்
கந்தடுகளிற்றினன காணவேள்குறுச்
சுந்தரச்சுண்ணநீர் முகத்திற்றூவி.

அம்துகில் = அழகிய ஆடை

நனைதலின் = நனைந்துவிட்டதால்

அல்குல் = மறைவிடம்

தோன்றுதல் = தோன்றுதலை

கந்தடு = கட்டுத்தறியை முறிக்கின்ற

(அடுத்த பக்கம் பார்க்க)


தந்தி:- "புறுமார்க்" திருச்சி.



## தாமரை பூத்த குளம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

களிற்றினன்—யானையையுடைய நளன்

காணா—பார்க்கவே

வெள்குறு—வெட்கமுற்று

சுந்தரம்—அழகான

சுண்ணநீர்—கந்தப்பொடி கலந்த தண்ணீரை

முகத்தில்தூவி—(தமயந்திநளனுடைய) முகத்தில்இறைத்தாள்.

'ராஜலீலை'க்கே இவ்வளவுகட்டுத் திட்டம், வரையறைவைத்துநடைத நூலாசிரியர் பாடி இருக்கும் போது, தேவலீலையை விளக்கவந்த ராமகாதையிலே, கம்பர், கொண்ட முறை சரியா, என்று கேட்டால், கோபிக்கின்றனர். கோபம் வருவது சரி, ஐயனே, ஏன் அந்தக் கோபத்தை, கலையை இக்கதிக்கு ஆளாக்கிய கம்பன்மீதுகாட்டாது, உள்ளதை எடுத்துக்கூறும் என்மீது காட்டவேண்டும்? நானு அக்கவிதை களைப்புனைந்தேன்; இல்லாததை எடுத்துரைத்தேனு? சந்தேகமிருப்பின், கம்பராமாயணம், நைடதம் இரண்டையும் எடுத்தப் புரட்டி, நான் குறித்துள்ள பாடல்கள் உள்ளனவா என்று பாருங்கள்.

"போ, போ, பரதா! நீங்களும் கவிபாட ஆரம்பித்தால் இப்படித் தான்பாடுவீர்கள்" என்று கூறுவர் கடைசி சமாதானமாக. ஆனால் அதுவும் பொருந்தாது.

அழகானகுளம்! தாமரை அற்புதமாகமலர்ந்திருக்கிறது! வனப்புள்ள ஒருபெண்! மூழ்கி மூழ்கிவிளையாடுகிறாள் அங்கு. ஒருஇளைஞன், கண்டுவிட்டான் காட்சியை, பறிகொடுத்தான் மனதை.

கம்பசித்திரத்துக்கு ஏற்றகாட்சி தானே இது! "குளோசப்" எடுக்க ஏற்ற இடம். ஆனால் எங்கள் கவி பாரதிதாசன், அந்தத்தடாகத்துக்கு உங்களை அழைக்கிறார், வந்துபாருங்கள், துளியேனும்அருவருக்கவோ, கூச்சப்படவோ, இடமிருக்கிறதா என்று.

> "தாமரை பூத்த குளத்தினிலே
> முகத்தாமரை தோன்ற மூழ்கிடு
> வாள்"

முகத்தாமரையைத்தான் காணலாம்! ஆனால் அவள் அழகி அல்லவோ, முகம்மட்டுந்தான் தெரியும்படி நீரிலேயே ஆழ்ந்து இருக்கிறாளோ? இல்லை! அழகான மேனியாள், ஆனந்தமாக நீர் விளையாடுகிறாள், ஆனால், "பண்பு" அவளை, "முகத் தாமரை தோன்ற மூழ்கிடுவாள்" என்ற அளவோடு நிறுத்துகிறது, முகம்மட்டும்தாமரைஅல்ல, மேனியே அழகுதான் அந்த மங்கைக்கு, ஆகவேதான் கவி,

> "அந்தக் கோமளவல்லியைக்
> கண்டுவிட்டான்"

என்று, ஒரேவார்த்தையில், சினிமாக்காரர் பாஷையில் கூறவேண்டுமானால், லாங் ஷாட் (Long distance shot) கொடுத்துவிட்டார் அவள் கோமளவல்லி என்று கூறி.

அந்தக்கோமளவல்லிமட்டும்,கம்பரிடம்சிக்கிஇருந்திருந்தால்,என்ன நேரிட்டிருக்கும்!குறைந்ததுபத்துப் பாடல்கள் அவருடைய உள்ளத்திலிருந்து 'குபு குபு' வென்றுகிளம்பி இருக்கும், அவைகளிலே ஒன்றிரண்டாவது," குளோசப் காட்சி" யாக இருந்திருக்கும்.

அவள் கோமளவல்லியாகஇருக்கலாம், ஆனால் அந்தக்குமரன் ஒரு தடிப்பயல்,முகத்தாமரையைக்கண்டுவிட்டும் தன்வழியேதான் சென்றான், என்று "வேதாந்தம்" பாடுகிறாரா என்றால், அதுவுமில்லை, "கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை" என்று காதல் கதைதான் கூறுகிறார். குப்பன் என்ன கண்டான்! முகத் தாமரையைக் கண்டான் முதலில், பிறகு ஒரேநொடியில் அவள் உருவ முழுவதும் கண்டான், அவளோர் கோமளவல்லி என்பதைத் தெரிந்துகொண்டான், பிறகு,

> "அவள் தூய்மை படைத்த
> உடம்பினையும் பசுந் தோகை
> நிகர்த்தநடையினையும்" காண்

கிறான்.

இவ்வளவும் கண்டான். பிறகு கதை தொடர்கிறது. இதிலே, எவ்வளவுபண்பு காட்டப்படுகிறது.

கலாரசிகர்களே! தாமரை பூத்த தடாகங்களைப் பார்த்தோம், உங்களைத்தான்கேட்கிறேன், இவைகளிலே, எந்தத்தடாகம், பண்பும் பாவின் இனிமையும் சமளவையாக் கப்பட்டுத்தீட்டப்பட்டிருக்கிறது, நீங்களே கூறுங்கள். புரட்சிக்கவிஞர், "குப்பன்" கதை கூறுகிறார், அதிவீரராமபாண்டியன் இராஜா கதைகூறுகிறார்;கம்பரோ,'தேவமா கதை" கூறுகிறார்;வெறும்பொழுது போக்குப் பாடலல்ல கம்பருடையது, பிறவிப்பெருங்கடலை நீந்திச் சென்று,சாலோகசாமீப சாயுச்யப் பதவியை அடைவதற்கான மார்க்க நூல் அது, என்பதை மறந்துவிட வேண்டாம். மார்க்கநூலிலே, இந்தக்காமமது இப்படிக்கரைபுரண்டு ஓடலாமா? என்பதுதான் நமது கேள்வி.

மறுபடியும் யோசியுங்கள், பிறகு கோபம் என்மீது வராது,அந்தஏட்டின்மேல் பாயும்.

தாமரைபூத்தகுளத்துக்குஅழைத்துச்சென்ற அங்கு தையலரை நிர்வாண நிலையில்கண்டு மகிழும் ஆடவர்உளர் என்றுகாட்டி, இது கலை, கலை மட்டுமல்ல, கடவுள் நெறிக்கான காவியம் என்று கம்பர் கூறுகிறாரே,அதுமுறையா என்று கேட்கிறேம். தவரு?

---

### பிறப்பு

புனலூர்த்தோழர் ஜி. கே.வர்க்கிஅவர்களின் துணைவியருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததன் நினைவாகத்"திராவிடநாடு" வளர்ச்சிக்கு ஒருரூபாய் தரப்பட்டது.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சித்திரைப் பள்ளிக்கூடம்

1946 எப்பிரல்மாதம் 20ம் தேதியிலிருந்து 6 வாரங்கள்வகுப்புக்கள் நடைபெறும். படிப்பை மத்தியில் நிறுத்தியவர்களும், ஏற்கனவே தனியாய் வீட்டில்கல்வி பயின்றவர்களும் இவ்வகுப்பில் சேர்ந்து படிக்கலாம். அவசியப்பாடங்கள் குறுகிய காலஅளவில் சொல்லிக்கொடுக்கப்படும். தங்கஇடமும் படிப்புச்செலவில்லாமல் கிடைக்கும். சாப்பாட்டுச்செலவு சுமார் ரூபா 20 ஆகலாம். சேர விரும்புகிறவர்கள் எப்பிரல் மாதம் 10ம் தேதிக்குள் பல்கலைக்கழகத்துக்கு மனுச்செய்து கொள்ளலாம்.

## பாரதிதாசன் நிதி

—●—

இவ்வாரம், பாரதிதாசன் நிதிக்காகத் "திராவிடநாடு" காரியாலயத்திற்குப் பணம் அனுப்பியவர்களின் விபரம் கீழேதரப்படுகிறது.

ஐந்துரூபாய் அனுப்பியவர்கள்:- திருச்செங்கோடு ஆர். வி. பொன்னுச்சாமி, தியாகராயநகர் ஞானவடிவேல்.

நான்குரூபாய் அனுப்பியவர்:— சென்னை போஸ்டல் ஆடிட் ஆபீஸ் வே. கி. சுப்பிரமண்யம்.

இரண்டுரூபாய் அனுப்பியவர்கள்:

சென்னைபோஸ்டல்ஆடிட்ஆபீஸ் தோழர்கள். ஏ. வி. ஜேம்ஸ், கே. ஆறுமுகம், பி. வரதராஜன், டி. வ. பாலசுந்தரம், எம். கன்னியப்பன், ஜி. நடராசன், மாத்தூர். எம். ஆர். இராசகோபால்நாயுடு.

ஒருரூபாய் அனுப்பியவர்கள்:— சென்னை போஸ்டல் ஆடிட் ஆபீஸ் தோழர்கள். பு. மா. தனபாலன், ஏ. சிவானந்தம், எஸ். மார்க்கண்டன், எம். முத்துச்சாமி, டி. என். இராமன்நாடார், எம். எஸ். சூரியநாராயணன், ஜே.பி.தெவோட்டா, எம். முருகேசன், ஜோசப்,ஸி.என். இலட்சுமணன், எம். ய். வாஹாப், வி. ஜெகன்னுயகலு, டி. பி. பிள்ளையார்உடையார், சி. திருநாவுக்கரசு, ஏ. சிவப்பிரகாசம், சு. பி. இரத்தினம், சி. பழனிச்சாமி, செ.த.உலகநாதன், எம். சுந்தரம்.

எட்டணு அனுப்பியவர்கள் :— சென்னை போஸ்டல் ஆடிட் ஆபீஸ் தோழர்கள். பு. சுப்புராமன், வி. இராமசாமி, டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, இலட்சுமிநாராயணன், ம. மாரிமுத்து, சு. நா. இரத்தினசாமி, ரெபல், அப்பாபிள்ளை,தி.நடராசன், தேவராம்.

மேற்படி நிதிக்காகப்பணம்வசூலித்து வைத்திருக்கும் தோழர்கள், தங்களிடமுள்ள தொகையைவிரைவில் அனுப்பிவைக்கும்படிகேட்டுக் கொள்ளுகிறேன்.

C. N. அண்ணாத்துரை,
பொருளாளர், கவிஞர் நிதி,
"திராவிடநாடு" காஞ்சிபுரம்.

---

### திராவிடநாடு பகுத்தறிவு நிலையம் பம்பாய்

31—3—46ல் மேற்படி நிலைய 2 வது மாதாந்தரக்கூட்டம் தோழர்எஸ். பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வர்த்தமானங்களும் வெளியூர்க்கடிதங்களும் வாசிக்கப்பட்டுப் புதுஅங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### திருமணம்

13—3—46-ம்தேதி ஈரோட்டில் தோழர் R. V. இராகவனுக்கும்—ஜானகி அம்மையாருக்கும் தோழர் பி. சண்முகவேலாயுதம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சீர்திருத்தத்திருமண நினைவாகத் "திராவிடநாடு" இதழுக்கு ரூபா 5 நன்கொடை அளிக்கப்பட்டது.

●

நாகைத்தோழர் சி. இலக்குவனுக்கும் பழனியம்மைக்கும் நடைபெற்றசீர் திருத்தத்திருமண நினைவாகத்"திராவிடநாடு" இதழுக்குரூபாய்1. தரப்பட்டது.

---

### குடந்தையில் இரு மகாநாடுகள்!

●

18–5–1946 தஞ்சைமாவட்டத் திராவிடர் மாநாடு, 19—5—1946 மாவட்ட சுயமரியாதைமாநாடு.

மாநாட்டுப்பந்தலிலேயே முதல் நாளிரவு காஞ்சி திராவிடநடிகர் கழகத்தாரால் **'சந்திரோதயம்'** நாடகமும் இரண்டாம் நாளிரவு **"சிவாஜிகண்ட இந்துஇராஜ்யம்"** என்ற நாடகமும் நடைபெறும்.

குறிப்பு:- சந்திரோதய நாடகத்தில் குடந்தைத் தோழர்களான V. சின்னதம்பி, K. K. நீலமேகம், P. R. பொன்னுசாமி. S. K. சாமி தோழியர் மூவலூர் S. இராமாமிர்தம், E. V. K. சம்பத் ஆகியவர்களும் நடிக்கிறார்கள்.

மாநாடுகளின் தலைவர்கள்,திறப்பாளர்கள், கொடியேற்றுபவர்கள் ஆகியவிபரம் அடுத்த இதழில் வெளிவரும்,

---

### புதுவைத் திராவிடர் கழகத் தேர்தல்

27–3–46ல் நடைபெற்றது. தலைவர் கனகசுப்புரத்தினம். துணைத்தலைவர்—ம. நோயேல்.செயலாளர்—ச. சிவப்பிரகாசம் துணைச்செயலாளர்—செ.கோவிந்தராஜு கணக்குப்பரிசோதகர்—வை. இராமசாமி மற்றும் எல். துரைராஜன், பொ. இராமலிங்கம், பா. கர்னே, ஆ. சண்முகசுந்தரம், ரா. வீராசாமி, சே.ஸ்ரீராமன்,பொ. நாராயணசாமி, சு. நாராயணசாமி, கு. நடேசன் ஆகியோராவர்.

### தென்னிந்திய ஒற்றுமை வாலிப சங்கம்

17–3–46ல் பெங்களூர் தண்டு தென்னிந்திய ஒற்றுமை வாலிபசங்கத்தார், தோழர்என். ஏ. பாலசுந்தரம்அவர்கள் தலைமையில்ஆஸ்டின்டவுனில். திராவிட மக்களின் முன்னேற்றத்தைக்கருதி ஒருகூட்டம் நடத்தினர்.

### நன்னிலம்

நன்னிலம்தாலுக்கா கங்களாஞ்சேரியில் செல்வம் நினைவுநாள் கொண்டாடப்பட்டு, திராவிடர் கழகமும்,செல்வம்இலவச வாசகசாலையும்திறந்துவைக்கப்பட்டு மாலை7மணிக்கு தோழர்கள் மு. கருணாநிதி எஸ். கே. சாமி கே. என். எஸ்.மணி முதலியோர் பேசினார்கள். கிராமவாசிகள் 500க்குமேல் வந்திருந்தார்கள்.






Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press 317—319 Hodgsonpet, Conjeeveram.